# சட்டமன்றத்தில் சுயாட்சிக்குரல்

ம.பொ. சிவஞானம்



பூங்கொடி பதிப்பகம்

T04910
R002B03

# சட்ட மன்றத்தில் சுயாட்சிக் குரல்

ம. பொ. சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

34, வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு
மயிலாப்பூர் : : சென்னை-600004.

முதற் பதிப்பு : 26-6-74
சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களது
69-வது பிறந்த நாள் வெளியீடு

விலை ரூபாய் மூன்று

மூவேந்தர் அச்சகம், 37, சி. பெ. ச. தெரு, சென்னை-14.

# முன்னுரை

இந்தியப் பெருநாடு விடுதலை பெறுவதற்காகப் பாடுபட்ட சான்ரோர்களிலே, தொண்டர்களிலே ஒருவனுக இருக்கும் பேற்றினை காலம் எனக்குத் தந்தது. ஆனால், பாரதம் சுதந்திரம் பெற்ற ஆகஸ்டு 15-ந்தேதியோடு விடுதலைப் போர் முடிந்துவிட்டதாக நினைப்பதற்கில்லை. அன்று, போர்முனை மாறியது; போர் முறை மாறியது. ஆனால் போர் தொடர்கின்றது. இது என் சித்தாந்தம். சுதந்திர இந்தியாவிலே மொழிவாரி தேசிய இனங்களின் தாயகமான மாநிலங்கள் முழு அளவு சுயாட்சி பெறும்போதுதான் சுதந்திரப் போர் முடிந்ததாகக் கருத முடியும். மாநில சுயாட்சிப் போராட்டம் பார்லிமெண்டரி முறைப்படி தற்போது நடத்தப்பட்டு வருகிறது. இந்தவகையில் சட்டப் பேரவையிலும், சட்ட மேலவையிலும் மாநில சுயாட்சி பற்றி நான் நிகழ்த்திய முக்கிய சொற்பொழிவுகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது.

24-4-74-ல் டாக்டர் இராசமன்னர் குழுவின் பரிந்துரையையும், தமிழக அரசின் வெள்ளை அறிக்கையையும் சட்ட மேலவை முன்வைத்து, அங்கு மாநில சுயாட்சி கோரும் தீர்மானத்தையும் முதல்வர் கலைஞர்

மு. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்தார். அந்தத் தீர் மானம் பற்றி தமிழரசுக் கழகம் கொண்டுள்ள கருத்தை விளக்கும் வகையில் 27-4-74ல் மேலவையில் யான் நிகழ்த்திய சொற்பொழிவு இந்நூலின் முதலில் வைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவின் அரசியல் வரலாற்றிலே, ''மத்தியில் சமஷ்டி;'' ''மாநிலங்களில் சுயாட்சி'' என்னும் கொள்கைக் காகவே பிறந்து அதற்காகவே, போராடி வரும் முதல் அமைப்பு ஒன்று உண்டென்றால், அது தமிழரசுக் கழகம்தான். அந்தக் கழகத்தின் சார்பில் இந்நூலை தமிழனத்தாருக்குக் காணிக்கை யாக்குகின்றேன்.

இதனைச் சிறந்த முறையில் வெளியிட முன்வந்த பூங்கொடிப் பதிப்பக உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. பொ. சிவஞானம்

# சட்ட மன்றத்தில் சுயாட்சிக் குரல்

முதல் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள், 23-4-1974 ஆம் நாளன்று தமிழக சட்ட மேலவையில் முன்மொழிந்த தீர்மானம் வருமாறு :

"மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும், தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும், இம்மேலவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு,

"பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

**"மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்**

மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப் படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இம் மேலவை முடிவு செய்கிறது.''

இந்தத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் நிகழ்த்திய உரை வருமாறு:

மாண்புமிகு தலைவரவர்களே! தமிழக முதல்வரவர்கள், அரசின் வெள்ளை அறிக்கையை இந்த அவைமுன் வைத்துத் தாம் முன்மொழிந்த தீர்மானத்திற்கு முன்னுரை கூறுகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்த அவையில் முன் மொழிவதாகக் குறிப்பிட்டார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நானும் என் வாழ்நாளில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பேச்சினை இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதன் மூலம் பெருமை அடைகிறேன். இது, திராவிட முன்னேற்றக் கழக அரசும், முதல்வர் கலைஞர் அவர்களும், அவருடைய சக அமைச்சர்களும் எனக்குத் தேடித் தந்துள்ள நற்பேறு என் பதை உணர்ந்து, அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதல்வர் அவர்கள் முன்னுரை ஆற்றுகையில்கூட, "இந்த மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வெற்றி தேட இடைவிடா மல் தொடர்ந்து தமிழரசுக் கழகம் முயற்சி எடுத்து வந்திருக் கிறது" என்பதனை, மிகுந்த பண்பாட்டுடன் குறிப்பிட்டு, இதற்காகப் பாடுபட்டவர்களுடைய உள்ளங்களில் மகிழ்ச்சி யினைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த மாநில சுயாட்சி முயற்சியிலே எனக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் சரித்திர பூர்வமான, உணர்ச்சி பூர்வமான தொடர்புண்டு. இதை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வரவர்கள் ஏற்றுக்கொண்டு, இரு கழகங்களும் இணைந்து செயல்படக்கூடிய ஒரு உணர்ச்சியை, சூழ்நிலையை உருவாக்கி

வருகிறார்கள் என்பதை நான் நன்றி உணர்வோடு காண்கிறேன்.

மாநில சுயாட்சி பற்றி ஆய்வு நடத்த ஒரு குழு அமைக்கப்படவிருக்கிறது என்ற எண்ணத்தை 1969ஆம் ஆண்டு ஜூன் 26ம் நாளில் நடந்த என்னுடைய பிறந்த நாள் விழாக்கூட்டத்தில் பேசுகிற போதுதான் முதல்வரவர்கள் முதன் முதலில் வெளியிட்டார்கள்.

பிறகு, 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு 20 ஆம் தேதியன்று— சுயாட்சிப் போராட்டம் நடத்த நிச்சயித்திருந்தபோது— அதற்கு முன்னாளில் — அதாவது, ஆகஸ்டு 19-ஆம் தேதியில், முதல்வரவர்கள், போராட்டத்தைக் கைவிடுமாறு என்னைக் கேட்டுக் கொண்டு சட்டப் பேரவையில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அதில், "டாக்டர் இராசமன்னார் தலைமையில் ஒரு குழு அமைக்கப் போகிறோம். அந்தக் குழு தன்னுடைய அறிக்கையைத் தருகிற வரை போராட்டம் தேவையில்லை; குழு அறிக்கை தந்தபின், அந்த அறிக்கையை சட்ட அவைகளில் வைத்து, அவற்றின் ஆதரவு பெற்ற பிறகு சேர்ந்தே போராடலாம்" என்று குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, அந்தப் போராட்டம் ஒரு நாளோடு நிறுத்தி வைக்கப்பட்டது. இவை முதல்வரவர்களுக்கும் இந்த அவையினருக்கும் நினைவிருக்கும்.

இந்த அவையின் முன்னே டாக்டர் ராசமன்னார் குழுவின் அறிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை ஒன்றை மட்டுமே வைத்து, அதை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டிருப்பார்களேயானால், எனது நிலைமை, நான் எடுக்க வேண்டிய முடிவு வேறு விதமாக இருந்திருக்கும். அப்படிக்கின்றி, அந்த அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, அதன் மீது ஆய்வு நடத்தி, அதிலே முற்போக்கான மாறுதல்கள் செய்து, வெள்ளை அறிக்கை ஒன்றையும் அவைமுன் கொண்டு வந்திருப்பதால் ஓரளவு மன நிறைவு பெறத்தக்க நிலையை நான் அடைந்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; வெள்ளை அறிக்கையை விடவும் இன்னொருபடி மேலே போய், ஒரு தீர்மானத்தையும் இந்த அவையில் பிரரேபித்திருக்கிறார்கள்.

> "மாநில சுயாட்சி பற்றியும், இராசமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும், தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று —மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இம்மேலவை முடிவு செய்கிறது."

என்ற வாசகத்தை அந்தத் தீர்மானத்திலே சேர்த்திருக்கிறார்கள். "தமிழ் நாடு உள்பட அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி; மத்தியில் உண்மையான சமஷ்டி வேண்டும்" என்று தமிழரசுக் கழகமும் நானும் கொண்டிருக்கும் கொள்கையை அரசு இந்தத் தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொண்டு அதுவே தன்னுடைய கொள்கை என்று அறிவித்துள்ளது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை—அவை முன் வைத்திருப்பதை —மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்று, ஆதரிக்கிறேன்.

இன்னும் விளக்கமாக—அரசு தயாரித்து அவைமுன் வைத்திருக்கிற — வெள்ளை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே,

> "இந்திய நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்டுள்ள மத்திய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் இலட்சியத்துடன், தமிழ்நாடு அரசு,

இராசமன்னுர் குழுவின் பரிவுரைகளை ஆய்ந்தபின், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளிலும் அதிகாரப் பட்டியல்களிலும் செய்யப்பட வேண்டிய திருத்தங் களை வகுத்துத் தொகுத்துள்ளது. இதன் விளைவான வேறு மாறுதல்களையும் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்தல் வேண்டும்."

என்றுள்ள பிரிவையும் படித்துப் பார்க்கிறேன்.

ஆக, ஒன்று நன்ருகத் தெரிகிறது. திராவிட முன்னேற் றக் கழக அரசின் அரசியல் கொள்கை, "மத்தியில் முழுமை யான, உண்மையான கூட்டாட்சி; மாநிலம் ஒவ்வொன்றிலும் முழுமையான, உண்மையான சுயாட்சி" என்பதுதான். இது தான் இந்த அரசின் கொள்கையாகத் தீர்மானத்திலும் கூறப் பட்டிருக்கிறது. ஆனுல், வெள்ளை அறிக்கையின் முன் பகுதி யிலே சொல்லப்பட்டிருக்கும் கொள்கைக்கும் பின்பகுதியி லுள்ள கோரிக்கைக்கும் நடுவே ஒரு இடைவெளி இருப்பதைக் காண்கிறேன்.

கொள்கை வேறு; கோரிக்கை வேறு—என்று பிரித்துக் கொண்டு, கொள்கையை முழுசாகத் தீர்மானத்தில் அறிவித் திருக்கிறது அரசு. ஆனுல், கோரிக்கை என்று வருகிற இடத் திலே சற்று அனுபவ சாத்தியமான, அவசர லாபத்திற்கு உரிய தான பகுதி வருகிறது.

நான்கு அதிகாரங்களைக் குறிப்பிட்டு, இவை மட்டும் மத் திய அரசுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். அதோடு அந்த வெள்ளை அறிக்கை முடிந்திருக்குமானுல், இன்னும் மிக்க மகிழ்ச்சியோடு நான் வரவேற்றிருக்கமுடியும். ஆனுல், அத்துடன் நிற்காமல், அரசியல் சட்டத்தின்—பகுதி பகுதியாக, ஆர்ட்டிகிள் ஆர்ட்டிகிளாக—உள்ளே போய், இன்னின்ன மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று ஆங்காங்கு சொல்லியிருக்கிறது. முன்னே நான்கு அதிகாரங்களை மட்டும் கொண்டு மத்திய அரசு அமைய வேண்டுமென்று சொல்லப்

பட்டிருக்கிற பகுதிக்கும், பின்னே அரசமைப்பை விதி விதியாக எடுத்துக் கொண்டு திருத்தங்கள் கோருகிற பகுதிக்கும் நடுவே இடைவெளி இருப்பதைப் பார்க்கிறேம். அவை ஒன்றேடொன்று முரண்பாடுடையவையென்று நான் சொல்லவில்லே. ஒன்றுக்கொன்று இளைத்திருக்கும் தன்மையைப் பார்க்கிறேன்.

4 அதிகாரங்கள் மட்டும் மத்தியில் வைத்துக் கொள்ளும் கூட்டாட்சி முறை வேண்டும்; முழு அளவுக்கு மாநில சுயாட்சி வேண்டும்—என்று சொல்லிவிட்ட பிறகு, "இதற்கான வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த ஒரு அரசியல் நிர்ணய மன்றத்தை அமைக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அந்த வெள்ளை அறிக்கையை அரசு முடித்திருக்குமானல், இன்னும் கொஞ்சம் நன்ருக இருந்திருக்கும். அரசமைப்பை விதி விதியாக விவாதிக்கக் கூடிய சூழ்நிலே இன்றில்லே. நமது சுயாட்சிக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால்தான்—அதாவது, மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களே மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதனே மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட பிறகுதான்—அப்படிப் பகிர வேண்டிய அதிகாரம் எது, எந்த அளவுக்கு என்ற விவாதத்தில் ஈடுபட்டுக் கருத்துக் களேச் சொல்லநாம் கடமைப்பட்டிருக்கிறேம். ஆனுல், மத்திய அரசு இதுவரை மாநில சுயாட்சியைக் கொள்கை அளவிலே கூட ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லே. இந்தியாவின் பிரதமர், 'சுயாட்சி' என்ற சொல்லே அபாயகரமானது என்று பிரச்சாரம் செய்து வருகிருர். இவையெல்லாம் பிரிவினேச் சக்திகளிடமிருந்து வருகின்ற கருத்துக்கள், குழப்பங்கள் என்றுகூடப் பெயர் வைத்துவிட்டார்.

இதற்குப் பிறகு, அரசியல் சட்டத்தை விதிவிதியாக எடுத்துக்கொண்டு திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டிய 'விதி' நமக்கு இல்லே என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனுல், ஒன்று. ஆட்சிக்கு வெளியே உள்ள என் கட்சியின் போக்கிலே மத்திய அரசை ஆளுங்கட்சியான

தி. மு. கழகம் அணுக முடியாது. அதை நான் புரிந்து கொள்கிறேன். பழியை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை மத்திய அரசுமீதுபோட்டுவிட்டு, தனது நிலை என்னஎன்பதை எடுத்துச் சொல்ல தமிழக அரசு முனைவதை நான் எதிர்க்கவில்லை.

அரசின் நிலையை இரண்டாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். ஆம்; சுயாட்சியை, குறைந்தபட்ச சுயாட்சி என்றும், அதிகபட்ச சுயாட்சி என்றும் பிரித்துக் கொண்டால், தீர்மானம் அதிகபட்ச சுயாட்சியைக் கோருகிறது; வெள்ளை அறிக்கையின் முன்பகுதியும் அதிகபட்ச சுயாட்சி என்று சொல்லுகிறது; பின் பகுதிதான் குறைந்த பட்ச சுயாட்சியைக் கோருகிறது. கொள்கை அளவில் அதிகபட்ச சுயாட்சி; ஆனால், கோரிக்கையாக வைக்கும் இடத்தில் குறைந்தபட்ச சுயாட்சியை முதல்வர் கேட்டிருக்கிறார்.

வேறெந்த முதல்வரிடமும் காண முடியாத இந்த ராஜ தந்திரத்தை நம்முடைய நாட்டு முதல்வரவர்கள் கடைப் பிடிக்கிறார்களென்று எண்ணுகிறேன். அது வெற்றி அடைய வேண்டுமே என்பதுதான் என்னுடைய கவலை. வெற்றி அடையாமல் போய்விடுமோ என்பதுதான் என்னுடைய வேதனை.

பொதுவாக, குறைந்தபட்சக் கோரிக்கையாகக் கருதி, இத் தீர்மானத்தையும் வெள்ளை அறிக்கையையும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நான் ஏற்கிறேன். ஆனால், ஏன் இதைக் கூட எதிர்க்கட்சிக்காரரர்கள் எதிர்க்கிறார்கள், ஏற்க மறுக்கிறார்களென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

சுயாட்சிக்குப் பிரிவினை என்று மாற்றுப் பெயர் வைக்கிறார்கள். நான் அவர்களை யெல்லாம் வேண்டிக் கொள்ளுகிறேன்; இந்த உலகத்தில் நாம் மட்டும் இல்லை. தமிழ் நாட்டிற்கு வெளியே, இந்தியாவிற்கு வெளியே ஒரு பெரிய உலகம் இருக்கிறது. உலக நாடுகளெல்லாமே இந்தியாவுக்கு நட்பு நாடுகளல்ல; பகை நாடுகளும் உண்டு. இந்தியாவின் நாசத்தை விரும்பும் நாடுகளும் உண்டு. அந்த நாடுகளின்

செவிக்கும் போகிற அளவில், பிரதம மந்திரி பதவியில் இருக்கும் ஒருவரிலிருந்து —ஆளும் கட்சியில் இருக்கிற மற்ற பெரியவர்கள் வரையில்— எல்லோரும் சேர்ந்து கொண்டு, "இங்கே பிரிவினை கேட்கும் ஒரு கட்சி ஆட்சி நடத்துகிறது" என்ற செய்தியை உலகுக்குக் கொடுப்பது எந்த நன்மையை எதிர்பார்த்து என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதில் அரசியலும் இல்லை; ராசதந்திரமும் இல்லை; தற்காப்பும் இல்லை. சுத்தமாகச் சொல்லப்போனால், தேசபக்திகூட இல்லை.

இரண்டு பொதுத் தேர்தல்களிலே வெற்றி பெற்றுள்ள— இளம் சிங்கங்களை லட்சக் கணக்கில் பெற்றுள்ள—ஆட்சியைப் பிடித்துக் கொண்டுள்ள ஒரு கட்சி நாட்டைத் துண்டாடக் கேட்கிறதென்று உலகத்தின் முன்னிலையில் விளம்பரப்படுத்துவது, இந்தியாவைப் பற்றி பிற நாடுகள் என்ன எண்ண வைக்கும்? அதிலும் முப்புறமும் கடல் பகுதியைக் கொண்ட —டாக்காவை நெருங்கிய அமெரிக்க 7ஆவது அணி கடற்படையை மறக்க வேண்டாம்—ஒரு மாநிலத்தில் பிரிவினைக் கொள்கையைக் கொண்ட ஒரு கட்சி ஆட்சி செய்கிறதென்று உலகத்திற்கு அறிமுகப்படுத்துவது தேசபக்திதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய முன்னாள் நண்பர்களான—இந்நாளிலும் தனிப்பட்ட நண்பர்களான— தேச பக்தர்களை நான் வேண்டுகின்றேன்.

இன்னொன்றையும் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். 'பிரிவினை கேட்கிறார்கள்' என்கிறீர்களே, அது உண்மைதானா? உங்களுடைய பலவீனத்தின் விளைவாக அதைச் சொல்கிறீர்களே ஒழிய, சுயாட்சித் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாத உங்கள் பரிதாபச் சூழ்நிலைக்கு ஏற்ப நீங்கள் சொல்கிற ராச தந்திர வாசகம்தானே ஒழிய உங்கள் மனம் அதை நம்பவில்லை. அது எனக்குத் தெரியும்.

முதல்வர் அவர்கள் தம்முடைய தீர்மானத்திலும் சரி, முன்னுரையிலும் சரி; ஐயத்திற்கு இடமின்றி, "நாங்கள் பிரிவினையைக் கோரவில்லை" யென்று சொல்லி யிருக்கிறார்கள்.

ஆனால், இங்கு பேசிய காங்கிரஸ்காரர்களில் சிலர் சொன்னார்கள், "நீங்கள் இப்படியே நாட்டைப் பிரிவினைக்குக் கொண்டு போய் விடுவீர்கள்; ஒரு நாளைக்கு பிரிவினையே கேட்டு விடுவீர்கள்" என்று. இது அப்பட்டமான பலவீனம். இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரசும் மட்டுமே இல்லை. அவற்றிற்கு அப்பாற்பட்ட கட்சிகளும் இருக்கின்றன. இந்த இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு அப்பால் கோடிக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, உண்மையில் பிரிவினையை விரும்பாத—அதை எதிர்க்கின்ற தேச பக்தர்களிடம் ஒன்றைக் கேட்கிறேன்; ஏன் மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லை? மக்கள் இந்தப் பிரிவினையை ஏற்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உள்நோக்கத்தை நீங்கள் ஆராய வேண்டிய அவசியமில்லை. அதைப் பற்றிய ஐயத்தைத் தூக்கி எறியுங்கள். பிரிவினைக்கு எதிராக மக்களை அழைத்துச் செல்லும் பிரச்சார இயந்திரம் வலுவாக இருக்கிறது உங்களிடம் என்று நீங்கள் எண்ணினால், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. மக்கள் பிரிவினை கேட்கக் கூடிய அளவுக்கு, அவர்கள் கோபப்படக் கூடிய அளவுக்கு உங்கள் மத்திய ஆட்சி நடந்து கொள்ளாதென்ற ஜனநாயகத் தன்மையில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை கேட்டுவிடுமோ என்று பயப்படத் தேவையில்லை. ஒருகால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக்குப் போய் விட்டால், அதைத் தடுக்கும் சக்தி உங்களுக்கில்லை என்றால், அப்போது ஆண்டவன் தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். வேறு நான் என்ன சொல்ல முடியும்?

இனி, பிரிவினைபற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

தமிழ்நாடு ஒருநாளும் பிரிவினையைக் கோராது. கடைசி வரை சுயாட்சி கோரிப் போராடுமே தவிர, மைய ஏகாதிபத்

தியத்திற்கும் அடி பணியாது; பிரிந்து வாழ்கின்ற நிலையை யும் அது கோராது. இந்த உறுதி எனக்கு இருப்பதால், 'நாங் கள் பிரிவினை கோரவில்லை' என்று முதல்வரவர்கள் சொன் னதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

'பிரிவினை, பிரிவினை' என்கிறீர்களே, அதற்குச் சான்று உங்களிலே ஒருவரும் சொல்லவில்லை. பேரவையில் நான்கு நாட்கள் நடந்தவிவா தங்களை நேராகக் கேட்டேன். இங் கும் மூன்று நாட்கள் கேட்டிருக்கிறேன். மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுத்து விடுவது பிரிவினைக்கு வித்து என்றால், அதற்கு ஒரு சான்றாவது நீங்கள் சொல்ல வேண்டுமே!

உலகில் சமஷ்டி நாடுகள் பல இருக்கின்றன. அமெரிக்கா, சோவியத் யூனியன், கனடா, ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து, மலேசியா ஆகியவெல்லாம் சமஷ்டி நாடுகளே! மாநிலங் களுக்குச் சுயாட்சி வழங்கியுள்ள நாடுகளே! அப்படிச் சுயாட்சி வழங்கப்பட்ட நாடுகளிலே, ஏதேனும் ஒரு மாநிலம் பிரிந்து போய் விட்டதென்றோ, மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கிவிட்டதால் நாட்டின் கட்டுக்கோப்புக் குலைந்து போய் விட்டதென்றோ, தேசிய ஒருமைப்பாடு அழிந்து, பகை நாட்டின் படை புகுந்து விட்டதென்றோ ஒரு சான்று சொல்ல முடியுமா? உலக சரித்திரத்தில் ஒரு சான்றினை பிரதமரவர் களோ அல்லது இந்த அவையின் உறுப்பினர்களோ எடுத்துச் சொன்னதுண்டா? இதற்கு நேர்மாறாக, பிரிவினையைத் தடுப் பதற்கு சுயாட்சி பயன்பட்டிருக்கிறது.

மாநிலசுயாட்சியை பிரிவினைக்கு மாற்றாகப் பெறுகிறோம். அது பிரிவினை அல்ல. பிரிவினை என்ற நோய்க்கு அது மருந்து.

உலகில் மாநில சுயாட்சியை ஒப்புக்கொண்ட எந்த ஒரு சமஷ்டியும் கலைந்து போகவில்லை. மாநில சுயாட்சியை ஒப் புக்கொள்ள மறுத்த எந்த ஒரு நாடும் தன்னுடைய ஏகத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டதில்லை.

அமெரிக்காவில்தான் முன்னதாக சுயாட்சி மாகாணங் கள் கொண்ட சமஷ்டி அமைந்தது. 1781ல் அங்கு சமஷ்டிச்

சட்டம் அமுலுக்கு வந்தது. அப்போது 13 ராஜ்யங்கள்தான் சமஷ்டியில் இருந்தன. இன்றைக்கு 52 ராஜ்யங்கள் இருக்கின்றன. 1781ல் சமஷ்டியில் சேர்ந்த ராஜ்யங்களில் ஒன்று கூட பிரியவில்லை. சேராத புதிய ராஜ்யங்கள் பின்னால் சமஷ்டியில் சேர்ந்து கொண்டன. இது மிகப் பெரிய ஒரு நாட்டின் அனுபவம்.

சோவியத் நாட்டில், மாநிலங்களுக்கு சுயாட்சி மட்டும் அல்ல; 'ரைட் ஆப் செஸிஷன்' என்ற பிரிந்து போகின்ற உரிமையும் உண்டு. இருந்தும் எந்த ஒரு மாநிலமும் இது வரை பிரிந்து போகவில்லை. புதிதாக சில நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

மலேசியாவில், விரும்பினால் பிரிந்து போகிற உரிமையோடு, மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் சுயாட்சியும் இருக்கின்றன. எந்த ஒரு மாநிலமும் அங்கே பிரிந்து போகவில்லை. உலகத்தில் எங்கும் இல்லாத—உவமை காட்ட முடியாத ஒரு இழிவைத் தமிழன் தலையில்தானா சுமத்த வேண்டும்?—என்று அவர்களுடைய தேச பக்தியின்மீது ஆணையிட்டு காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன்.

"பிரிவினை பற்றிய அச்சம் இருக்கிறது" என்று நம்முடைய தீட்சிதர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் "நாங்கள் ஏகாதிபத்தியத்தையே எதிர்த்தவர்கள், உங்களுக்கா பயப்படுவோம்?" என்றும் சொன்னார்கள். இப்போது காங்கிரசில் புதிதாகப் புகுந்தவர்கள் எல்லாம் இப்படித்தான் பேசுகிறார்கள். பழைய காங்கிரஸ்காரரான இராசாராம் நாயுடு அவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள்; நானும் அப்படிச் சொல்லமாட்டேன்.

தீட்சிதர் சொன்னதையே நானும் திருப்பிச் சொல்லுகிறேன்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே வெளியேற்றி வெற்றிபெற்ற தமிழருக்கு—கட்டபொம்மன் சாதிக்கு கப்பல் ஓட்டிய தமிழன் சாதிக்கு இந்த டெல்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி காண்பது முடியாத காரியம் அல்ல.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சரித்திரம் காங்கிரஸ் கட்சிக்கு ஏகபோகமாக இருந்த காலம் போய்விட்டது. இன்று ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்களில் சிலர்தான் அங்கே! பலர் வெளியே இருக்கிறார்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்தவே கூடாது, திருத்தாமலே அதிகாரங்களைப் பரவலாக்கலாம் என்று கூறுகிறார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்தாமல், அதன் கட்டுகோப்பைக் குலைக்காமல், அதிகாரங்களைப் பரவலாக்குவது எப்படி சாத்தியமாகும்? நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் பண்புமிக்கவர், பாரத நாட்டிலேயே! அவர்கள் நமக்குக் கிடைத்தது அரியவாய்ப்பாக இருக்கிறது. அவரையே கேட்கிறேன், அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் அதிகாரங்களைப் பரவலாக்குவதை எப்படிச் செய்யமுடியும்? எனக்கு எடுத்துச் சொல்லுங்கள். நான் கோரும் இந்த விளக்கத்தை அந்த அவையிலும் யாரும் சொல்லவில்லை; இங்கேயும் சொல்லவில்லை. மத்திய அரசிடமுள்ள சில வரி இனங்கள் மாநிலத்திற்குத் தேவைப்படுகின்றன. அதை எப்படிப் பெறுவது? சட்டத்தைத் திருத்தாமல் மத்தியத்திற்குள்ள வரி இனங்களை எப்படி மாநிலத்திற்கு மாற்ற முடியும்? அதிகாரங்களை, மாகாணப் பட்டியல், மத்திய பட்டியல், பொதுப்பட்டியல் என்று பிரித்து இருக்கிறார்கள். ஒரு பட்டியலில் உள்ள அதிகாரங்களை இன்னொரு பட்டியலுக்கு மாற்றவேண்டுமென்றால், சட்டத்தைத் திருத்தாமல் எப்படி முடியும்? சட்டத்தைத் திருத்தாமலே மாற்றுவதற்கு வழி வகை இருக்கிறதா?—சொல்லுங்கள்.

கல்வித்துறையைப் பொறுத்த மட்டில், அது மாநில சப்ஜெக்ட். அப்படிப்பட்ட கல்வித் துறையில்கூட மத்திய ஆட்சி இப்போது என்ன செய்கிறது? சில பல்கலைக் கழகங்களை அது எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆந்திரா பல்கலைக் கழகத்தையும் திருப்பதி பல்கலைக் கழத்தையும் ஆந்திர சர்க்கார் நடத்துகிறது. அங்குள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தையும் அதனிடம் கொடுத்தால், அது நடத்த முடியாதது அல்ல,

தனியார்கூடப் பல்கலைக் கழகங்கள் நடத்தும்போது ஆந்திர மாகாண அரசு உஸ்மானியா பல்கலைக்கழகத்தை நடத்த முடியாதா?

ஆக்ரா பல்கலைக் கழகம் மத்திய அரசிடம் இருக்கிறது. டெல்லி பல்கலைக் கழகமும் அதனிடமே இருக்கிறது. ஆகவே, அவற்றிற்காக ஒரு கல்வி இலாகாவை டெல்லியில் வைத்துக் கொண்டிருப்பது சரிதானா? டெல்லியில் ஒரு கல்வி மந்திராலயத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சில பல்கலைக் கழகங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமா?

அமெரிக்காவில் தொழில் நுணுக்கக் கல்லூரிகளை, என்சினீயரிங் கல்லூரிகளை அந்த நாட்டின் தொழில் அதிபர்களே நடத்துகின்றனர். தொழில் நிறுவனங்களே நடத்துகின்றன. அப்படியானால், இங்கே மத்தியஅரசிடமுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளை மாநில அரசுகள் நடத்த முடியாதா? ஆரம்பக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி இவைகளை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிற மாநிலத்தில், ஒரே ஒரு கல்விமந்திரிதான் இருக்கிறார். ஆனால், மத்தியிலோ, ஒரு கல்வி மந்திரி; ஒரு ஸ்டேட் மந்திரி; ஒரு டெபுடி மந்திரி! இத்தனை பேர் அங்கு தேவைதானா?

நான் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பவர்களை ஒன்று கேட்கிறேன்; டில்லியிலுள்ள கல்வி இலாகாவை அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இழுத்து மூட முடியும் என்று நம்புகிறீர்களா? 'ஆம்' என்றால், எப்படி என்பதை எடுத்துச் சொல்லுங்கள். அரசியல் சட்டத்தைத் திருத்தாமல், எந்த அதிகாரத்தை மத்திய அரசிடமிருந்து மாநிலத்திற்கு மாற்ற முடியும்?

இந்த அவைக்குக் கொடுத்திருக்கிற வெள்ளை அறிக்கையில், நான் முன்னே சொன்னது போன்று சிற்சில அதிகாரங்களைத்தானே அரசு கேட்கிறது? முதல்வரவர்கள் என்ன நினைக்கிறார்களோ எனக்குத் தெரியவில்லை; கொள்கையை முழுசாகச் சொல்லி விட்டு, கோரிக்கையில் வெள்ளை அறிக்கையும் தீர்மானமும் பின்வாங்கி விடுகின்றன. மொத்தத்தில் அதிகாரங்கள்

பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் கேட்கப்படுகிறது. அதிகாரப் பரவல் முறையை காங்கிரஸ் எதிர்க்கத் தயாராக இல்லை என்றால், இந்த வெள்ளை அறிக்கையை அது முணு முணுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு வழியில்லை.

அதிகாரப் பரவல் முறையால் மாநிலங்களுக்கு முழுசுயாட்சி கிடைக்காது என்பது என்னுடைய முடிவு.

பூர்ண சுயாட்சி என்றால் என்னவென்று சொல்லுகி றேன், கேளுங்கள்:

இந்தியாவின் ஒருமைப்பாட்டை நாம் ஒப்புக்கொண்ட பிறகுங்கூட, ''அது 'கான்பெடரேஷன்' ஆக இருந்தால் போதும்'' என்று நான் சொல்லமுடியும்; அதாவது ஒரு சங்கம் அமைத்து, அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் பரஸ்பரம் கருத் துக்களைப் பரிமாறிக்கொள்வது கான்பெடரேஷன். தமிழரசுக் கழகம் கேட்பது கான்பெடரேஷன் அல்ல; பெடரேஷன் தான் கேட்கிறது. 'கான்பெடரேஷன்' ஒரு சங்கமே யொழிய, அது சர்க்கார் அல்ல. அமெரிக்காவில் அப்படி ஒரு கான்பெட ரேஷன் அமைத்து, 6 ஆண்டு காலம் நடத்திப் பார்த்தார்கள். அப்புறம் கான்பெடரேஷன் பாதுகாப்பானது அல்ல என்று உணர்ந்து பெடரேஷனுக்குத் திட்டம் வகுத்தார்கள். இவ் வளவு காலத்திற்குப் பிறகு நாம் கான்பெடரேஷனுக்குப் போகமுடியாது.

பண்டித ஜவகர்லால் நேரு—விடுதலைப் போரின்போது— காஷ்மீருக்குப் போனார். அங்கே சுயாட்சிப் பிரச்னை வந்த போது, 'இந்திய கான்பெடரேஷன்தான் நம்முடைய இறுதி நோக்கம்' என்று சொல்லியிருக்கின்றார். அது கிடக்கட்டும். இந்த ஆட்சி கேட்பது முழு பெடரேஷன் கூட அல்ல; அதற் கும் கீழே இறங்குகிறது என்பதுதான் முக்கியம்.

ருஷ்யாவிலே, 'ரைட் ஆப் செசிஷன்' பிரிந்து போகிற உரிமையோடு மாகாணங்கள் கூட்டாட்சியில் இருக்கின்றன. அந்த உரிமையை வெள்ளை அறிக்கையோ, தீர்மானமோ வற் புறுத்தவில்லை.

இரண்டு நாளைக்கு முன்பு இங்கு நண்பர் முத்துசாமி பேசும்போது, அவரை இடைமறித்து, "பிரிந்து போகிற எண்ணம் எங்களுக்கு இல்லை" என்று முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஆம்; சோவியத் நிலைக்கும் கீழே இறங்குகிறது வெள்ளை அறிக்கை.

சுயாட்சி பெற்ற மாநிலங்கள், சர்வதேச மன்றத்தில்—அதாவது, ஐ. நா. மன்றத்தில் அங்கம் வகிக்கலாம். சோவியத் யூனியன் மாநிலங்களான உக்ரேன், பைலோருஷியா இரண்டும் ஐ. நா. மன்றத்தில் அங்கம் வகிக்க உரிமை பெற்று விட்டன. நம் இந்தியாவில் ஏதேனும் ஒரு மாகாணம் அந்த உரிமையைக் கேட்கத் தகுதியுடையது என்றால், அது தமிழ் நாடு ஒன்றுதான்.

பர்மா, சிலோன், சிங்கப்பூர், மலேசியா போன்ற அயல் நாடுகளில் நம்முடைய மக்கள்—இந்தியர்கள் என்ற பெயரில் தமிழர்கள்—வாழ்கின்றார்கள். இலங்கையில் தமிழர்-சிங்களர் பிரச்சினை, பர்மாவில் தமிழர் விட்டுவந்த சொத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்க மறுக்கும் பிரச்சினை இவைகளை ஐ. நா. மன்றத்தில் எடுத்துச் சொல்லி தமிழ் இனத்தைப் பாதுகாத்துக் கொள்ள அதிலே நமக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டால், அது பாவம் அல்ல. சோவியத் யூனியனைச் சான்று காட்டலாம் முதலமைச்சர். ஆனால், வெள்ளை அறிக்கையில் தமிழக அரசு அதைக் கேட்கவில்லை.

அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற பெடரேஷன்களில் ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி கான்ஸ்டிடியூஷன் உண்டு. அங்கெல்லாம் பெடரல் கான்ஸ்டிடியூஷன் வேறு; ஸ்டேட் கான்ஸ்டிடியூஷன் வேறு. இங்கு, யூனியனுக்கும் மாநிலத்திற்குமாக ஒரே கான்ஸ்டிடியூஷனைத்தான் வைத்திருக்கிறோம்.

அந்த சமஷ்டிகளிலே ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சுய நிர்ணயமும் உண்டு. ஆம்; சுயாட்சி மட்டும் அல்ல; அந்த

சுயாட்சியை நடத்துவதற்கு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ரைட் ஆப் செல்ஃப் டிட்டர்மினேஷன்—சுயநிர்யணம்—கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே உள்ளது ஒரே கான்ஸ்டிடியூஷன் தான். இதை மாற்றி ஸ்டேட் கான்ஸ்டிடியூஷன் தனித் தனியாகத் தயாரித்துக்கொள்ள சுயநிர்ணய உரிமை வேண்டும். இந்த வெள்ளை அறிக்கை அதைக் கேட்கவில்லை. அந்த நிலைக்கும் கீழே இறங்கியிருக்கிறது.

அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலும் நேஷனல் ஃபிளாக் வேறு; ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஸ்டேட் ஃளாக் வேறு. அதிகார அந்தஸ்துடையது ஸ்டேட் ஃபிளாக். ஆனால், மந்திரிகள் காருக்கே கொடி கொடுக்க மறுத்த அரசிடம் போய் 'ஸ்டேட் ஃபிளாக் கொடு' என்று கேட்டு அசிங்கப்படுத்திக் கொள்ளவேண்டாம் என்று முதல்வர் அவர்கள் எண்ணினர் களோ என்னவோ, கேட்கவில்லை.

அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலும் நேஷனல் சாங் வேறு; ஸ்டேட் சாங் வேறு. நேஷனல் 'சாங்'க்குக்கு விரோதம் இல்லாமல் ஸ்டேட் சாங். இந்த வெள்ளை அறிக்கை அப்படி எல்லாம் ஒன்றும் கேட்டுவிடவில்லை.

**மொத்தத்தில் சொன்னால், 'டீசென்ட்ரலைசேஷன்' என்ற அளவிற்குத்தான் தமிழக அரசு கோருகிறது. குறைந்த பட்ச சுயாட்சியோடு ஆறுதல் அடைகிறது.**

'சுயாட்சி' என்ற வாசகத்தைக் கேட்டு காங்கிரஸ்காரர் களாகிய நீங்கள் பயப்படுகின்றீர்களா? அல்லது எங்களைப் பயமுறுத்துகின்றீர்களா? அல்லது ஊரைப் பயமுறுத்து கின்றீர்களா? இந்த பயமுறுத்தல் வெகு நாட்களுக்கு நீடிக் காது. 'சுயாட்சி' என்ற சொல்லுக்கு உங்களுடைய அரசியல் ஞானத்தையே நீங்கள் அவமானப்படுத்திக் கொள்ளும் வகை யில் தவறான வியாக்கியானம் சொல்லக்கூடாது. ஒன்று, 'நாங்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை' என்று சொல்லுங்கள்; 'அதை நாங்கள் எதிர்க்கிறோம்' என்று தைரியமாகச் சொல் லுங்கள். ஆனால், 'இது பிரிவினைக்கு வழிகாட்டுவது; சுயாட்சி

அளித்து விட்டால் நாடு என்னமோ ஆகிவிடும்'—என்றெல்லாம் தவருகச் சொல்லவேண்டாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் சொன்ஞர், 'லோகல் போர்டு அடானமஸ்' பற்றி. லார்டு ரிப்பன் கொடுத்த சீர்திருத்தத்திற்கு 'ஸ்தல சுயாட்சி' என்றுதான் பெயர். இன்னும் சொல்லப்போனுல் யூனிவர்ஸிடியையே 'சுயாட்சி அந்தஸ்து பெற்றது' என்று சொல்லுவது வழக்கம். அப்படிப்பட்ட 'சுயாட்சி'யைக் கண்டு காங்கிரஸ் ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? எனக்குப் புரியவில்லை.

சுயாட்சி என்ற வார்த்தையை வழக்கத்திற்குக் கொண்டு வந்ததே காங்கிரஸ்தான். டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் எழுதிய காங்கிரஸ் வரலாற்றை எடுத்துப் படித்துப் பாருங்கள். அவர் சொல்லுகிருர், "மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்கவேண்டும் என்ற அடிப்படையை வைத்துத் தான் காங்கிரஸ் மகாசபை காங்கிரஸ் மாநிலங்களை மொழி வாரியாகப் பிரித்தது" என்று. காங்கிரசின் சரித்திரத்தில் கோளாறு இல்லை. நானும் சேர்ந்து வரைந்ததுதானே அந்தச் சரித்திரம்?

'நாங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசை எதிர்த்துப் போரிட்டவர்கள்' என்று சொன்ன தீட்சிதர் அவர்களுக்குச் சொல்லுகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டு சேர்ந்துவிட்டதால் சிவஞானத்தின் தேசபக்திக்குத் தீட்டுப் பட்டு விடவில்லை. தீட்டுப்படவும் செய்யாது.

இந்த அவையில் அரசியல் சட்டத்தின் பெயரால் நான் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டது வெறும் சடங்கல்ல. அதை ஒரு சன்மார்க்க நெறியாகவே நான் எண்ணுகிறேன். அரசியல் சட்டத்தை நான் என்றுமே மதிக்கிறவன். ஏன் என்ருல், இந்த அரசியல் சட்டம் சுதந்திர இந்தியாவின் முதல் அரசியல் சட்டம். அது. தேச விடுதலை வீரர்களின்

இரத்தத்தால் எழுதப்பட்டது. அதை எழுதுவதற்கு இரத்த தானம் செய்தவர்களிலே நானும் ஒருவன்.

'மாநில சுயாட்சியைத் தமிழ் நாடு மட்டும் ஏன் கேட்கிறது?' என்கிறார்கள். இது கொஞ்சம் பசையுள்ள வாதம் தான். 'இந்தியாவிலுள்ள அவ்வளவு மாநிலங்களும் கேட்காதபோது, தமிழ் நாடு மட்டும் கேட்பானேன்?' என்று கேட்கிறார்கள். நானும் திருப்பிக் கேட்கிறேன் அவர்களை, 'இந்தியா முழுவதும் பிரிக்கமுடியாத ஒரே நாடு' என்று நீங்கள் வாதிடும்போது, மாநிலத்திற்கு மாநிலம் வேற்றுமை ஏன்? காஷ்மீரத்திற்கு மட்டும் தனி அரசியல் சட்டத்தைத் தயாரித்துக் கொள்ள அனுமதி தந்தது ஏன்? இந்திய அரசியல் சட்டத்தை எடுத்துப் பாருங்கள்; ஒவ்வொரு விதிக்கும் அடியிலே, 'நோட்' போடுவதைப்போல, எவ்வளவு விதிகளை— ஒன்று இரண்டு இல்லை, எண்ணற்ற இடங்களிலே— 'இது காஷ்மீரத்திற்கு விலக்கு', 'காஷ்மீரத்திற்கு இது பொருந்தாது,' 'காஷ்மீரத்தைப் பொருத்த வரையில் இந்தத் திருத்தம் செல்லாது,' 'காஷ்மீரத்தைப் பொருத்தவரையில் இது இன்ன தேதியிலிருந்துதான் செல்லும்' என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறதே, அது ஏன்? ஒரே ஒரு மாநிலத்திற்கு மட்டும் விதிவிலக்கு எதற்கு? இது என்ன நியாயம்?—என்று கேட்கிறேன்.

அதைப் பார்க்கும் போது, தமிழ் நாட்டிற்கு மட்டுமே மாநில சுயாட்சி கொடுத்து ஆக வேண்டும் என்று கேட்க எங்களுக்கும் உரிமை உண்டு. காஷ்மீரத்திற்குத் தந்த சுயாட்சியை எங்களுக்கும் தந்து ஆகவேண்டும் என்று நான் கேட்கக் கூடாதா?

ஒருவேளை, 'அங்கே கலகம்—பலாத்காரம் நடப்பதால் கொடுத்தோம்' என்று சொல்லுவார்களானால், நான் சொல்லுகிறேன்; நாளை கலைஞரோ பிரிவினையை விரும்பாமல் இருக்கலாம். எங்கள் சந்ததியினர் எங்களைப் போலவே இருப்பார்கள் என்று நாங்கள் எப்படி உத்திரவாதம்

கொடுக்கமுடியும்? எனவே, நான் கேட்கிறேன், நாம், பிரிவினையைத் தடுக்கும் முறையில், ஒற்றுமையை ஓங்கச் செய்யும் வகையில், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தினுல் என்ன கெட்டுவிடும்? அதைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்பதற்காக யாரும் என்மீது கோபப்படவேண்டிய அவசியமில்லை.

நமது முதலமைச்சர் அவர்களைச் சிலர், முஜிபுர் ரஹ்மான் அவர்களோடு ஒப்பிட்டுப் பேசிவிட்டார்களாம். அதில் என்ன தவறு இருக்கின்றது? ஒரு கட்சியிலே— தலைவர் பேரிலே பக்தி கொண்டவர்கள்— அன்பினுல் எவ்வளவோ சொல்லுவார்கள், ஆண்டவனைப் பார்த்துச் சொல்வதைப்போல! ஆனுல், அப்படிச் சொல்லுகின்றவர்களுக்கு முஜிபுர் ரஹ்மானைப் பற்றியும் தெரியாது. முஜிபுர் ரஹ்மானுக்கு எதிராக இருந்தவர்களைப் பற்றியும் தெரியாது. அவர்கள் அன்பினுல், ஆர்வம் மிகுதியால் கொடுக்கும் கோஷம் அது. அப்படிச் சொல்வதில் பிழை இல்லை, பயப்பட வேண்டாம். முஜிபுர் பிரிவினை வாதியல்ல. அண்மையில் நடந்த நிகழ்ச்சியைக்கூட காங்கிரஸ் நண்பர்கள் மறந்து விடுகின்ருர்கள். என்ன செய்வது இதற்கு?

முஜிபுர் அவர்கள் மாநில சுயாட்சிதான் கேட்டார். யாகியாகான் அவரைச் சிறைப்படுத்திய நேரம் வரையில் அவர் மாநில சுயாட்சிதான் கேட்டார். பிரிவினையல்ல. மாநில சுயாட்சியைக் கேட்டுக் கொண்டேதான் சிறை சென்ருர் ஆனுல், திரும்பி வரும்போது மக்கள் படைத்து விட்ட சுதந்திர வங்க தேசத்திற்கு வந்தார். சுதந்திர வங்கத்தை முஜிபுர் ரஹ்மான் கேட்கவில்லை. அவர் கேட்டதெல்லாம் சுயாட்சி வங்கந்தான். ஒன்றைச் சொல்லுகின்றேன்; அகந்தையாக அல்ல; அடக்கத்தோடு!

நான்கு கோடித் தமிழர்களும் முஜிபுர் ரஹ்மான்களாக மாறினுலும் தமிழ்நாடு சுதந்திர நாடாகிவிடாது. ஆனுல், ஒரு இந்திரா காந்தி யாகியாகான் ஆகிவிட்டால் இது சுதந்திர நாடாகிவிடும். ஆளுவோருக்கு எச்சரிக்கை விட்டுச் சொல்ல

வில்லே. தேசபக்தியின் விளைவாகச் சொல்லுகிறேன். 'முஜிபுர்' என்ற வார்த்தையைக் கேட்டுப் பயப்பட வேண்டாம்.

நான் அப்படிச் சொன்னவர்களைக் கண்டிக்கிறேன். ஏன் கலைஞர் அவர்களை மட்டும் சொன்னார்கள் 'முஜிபுர்' என்று? என்னையும் ஏன் அவரோடு சேர்த்திருக்கக்கூடாது? நான்கு கோடித் தமிழர்களையும் ஏன் சேர்த்திருக்கக்கூடாது? ஒவ்வொரு தமிழனும் முஜிபுர் ரஹ்மான் ஆவான் என்று இந்த மன்றத்தில் சொல்ல எனக்கு உரிமை உண்டு. துணிவும் உண்டு. பிரிவினையை விரும்பாதவர் முஜிபுர் ரஹ்மான் அவர்கள். சிறையிலிருந்து அவரை விடுவித்தபின் பூட்டோ என்ன செய்தார்? அவரைச் சிறையில் இட்ட— அவர் கோரிய சுயாட்சிக் கோரிக்கையை ஏற்கமறுத்துவிட்ட—யாகியாகான் வங்கத்தை இழந்தார். ஆனல், அவரை விடுதலை செய்தவுடன் விருந்தினர் மாளிகையில் வைத்துக்கொண்டு, "நாங்கள் சுயாட்சி கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். வங்கம் பிரிந்து போனதை உறுதிப்படுத்தி விடாதீர்கள்; வங்கம் பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்" என்று பூட்டோ கேட்டுக்கொண்டார். தாமே விரும்பி, பல நாள் அவரை விருந்தினர் மாளிகையில் வைத்துக்கொண்டு கெஞ்சிக் கேட்டார் பூட்டோ. அப்போது முஜிபுர் என்ன சொன்னார்? 'என் தேச மக்களைக் கேட்டுத்தான் நான் எதையும் சொல்ல முடியும்; அவர்களைக் கலக்காமல் நான் எதையும் சொல்ல முடியாது' என்றார். சுதந்திர வங்கம் வேண்டாம் என்று அவர் சொல்லவில்லை.. சுதந்திர வங்க தேசம் என்பது மக்கள் படைப்பு. பயப்படுகிறீர்களே, இன்றைக்கு முஜிபுர் ரஹ்மான் என்ற வார்த்தையைக் கேட்டு? காந்தியடிகளின் கீழ் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களா இவ்வளவு பயந்தாங்கொள்ளிகளாகி விட்டீர்கள்? ஆச்சரியப்படுகிறேன்.

அன்றைக்குக் காந்தியடிகள் என்ன சொன்னார்கள்? 'மாநிலங்களுக்கு எத்தகைய சுயாட்சி வேண்டும்' என்று செய்தி நிருபர்கள் அடிகளாரைக் கேட்ட நேரத்திலே, "இந்தியா முழுவதற்கும் எத்தகைய சுதந்திரம் இருக்க

வேண்டும் என்று விரும்புகின்றேனே, அத்தகைய சுதந்திரம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கவேண்டும் என்றுதான் நான் கூறுகிறேன். ஆனால், 'சுதந்திரம்' என்பதன் பொருள் பிரிந்து போவது என்பதல்ல'' என்றார். அடிகளின் இலக்கணப் படிப் பார்த்தால், சுயாட்சி என்பது பிரிந்துபோய் விடுவதல்ல; இந்தியாவுடன் இணைந்து இருக்கவேண்டும். "பிரிந்து போகும் உரிமையைத் தவிர மாநிலங்களுக்கு வேறு எந்த உரிமையும் வழங்கலாம்'' என்று காந்தியடிகள் சொன்னார்கள். அவர் பயப் படாதபோது இன்றைக்கு நீங்கள் எதற்காகப் பயப்படு கின்றீர்கள்? இது எனக்கு வியப்பாகவும் இருக்கிறது. வேதனை யாகவும் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை ஏன் விட்டு விட்டது? இராஜாஜி அவர்களின் வேண்டுகோள் ஒன்றை இங்கு படிக்கிறேன்; சேலத்தில் செய்தி நிருபர்களுக்கு இராஜாஜி அவர்கள் அளித்த பேட்டி 3-5-61 'தினமணி' இதழில் வெளி வந்திருக்கிறது. அதிலே,

> "இந்தியாவிலிருந்து பிரியும் அனுபவ சாத்திய மற்ற விருப்பத்தை ஒதுக்கிவிட்டு, முழு சுயாட்சி உரிமையுள்ள இராஜ்யத்திற்குத் தங்கள் கோரிக் கையை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குறைத் துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.
>
> "இராஜ்ய சர்க்கார்களின் ஆலோசனையின் பேரில் மத்திய சர்க்கார் நாட்டின் நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்று தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம் விதிக்கிறது. ஆனால், இராஜ்ய சர்க்கார் ஒரு அடிமையாகி, மத்திய சர்க்காரின் மானியத்தைக் கேட்கிறது. அதற்காக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது."

என்று சொன்னார். இதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை விட்டு மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கு இல்லை.

இன்னும் இராஜாஜி சொல்லுகிறார்:

"சம அந்தஸ்துள்ள சுயாட்சி உறுப்புக்களடங்கிய சமஷ்டி யூனியன் உருவாக்கவே நாம் உழைக்க வேண்டும், சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

"1947 க்குப் பிந்திய அரசியல் வரலாறே அதிகாரங்களை மத்திய அரசிடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசிடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

"மானியம் பெறும் அமைப்புக்களின் நிலைக்கு மாநிலங்களெல்லாம் அதிவேகமாகத் தாழ்த்தப்படுகின்றன. மத்திய அதிகாரம் விஸ்தரிக்கப்படுவதை விரும்புவோருக்கு இது பிடித்தமாய் இருக்கக் கூடும். ஆனால், இது மணல் வீடாகவே முடியும். அதிக காலம் நீடித்து நிற்க முடியாது."

"வெளிநாட்டுறவு, பாதுகாப்பு ஆகிய துறைகள் தவிர, இதரவற்றில் சமஷ்டிக்குள்ள அதிகாரங்கள் மிக மிக அற்பமான அளவுக்குக் குறுகிவிட வேண்டும். அதே நேரத்தில், மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் அதிகமாக வேண்டும்."

இதை நான் எடுத்துக் காட்டுவது இராஜாஜி அவர்கள் சொன்னதற்காக சுயாட்சி கேட்கிறோம் என்பதற்கல்ல; விடுதலைக்காகப் போராடாதவர்கள் சுயாட்சி கோரினால், அது பிரிவினைக் கருத்து; நேற்று பிரிவினையைக் கேட்டவர்கள் இன்றைக்கு அதை விட்டுவிட்டு சுயாட்சி கேட்டாலும் அதையும் பிரிவினை என்று சொல்லுகின்றீர்களே. அதனை மறுப்பதற்காகத்தான்!

இராஜாஜி அவர்கள் என்ன கேட்கிறுர்கள்? யார் இராஜாஜி? நமக்குத் தெரியும் அவர் யார் என்று. அவரது தேசபக்தியை யாராவது எள்ளளவுக்காவது சந்தேகிக்க முடியுமா? இன்னும் சொல்லப்போனுல், விடுதலைக்குப் பிறகு எழுதி முடிக்கப்பட்ட நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலே கவர்னர் ஜெனரல் என்ற அந்தஸ்தில் இருந்து கையெழுத்திட்டவர்—அந்த சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர்—சொல்லுகின்ருர் இந்தக் கருத்துக்களை!

டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தைப் படைத்த கர்த்தாக்களிலே ஒருவர். அவர் சொல்கிறுர்:

"டெல்லிக்குக் காவடி எடுப்பதாகக் கூறப்படும் புகாரில் உண்மை இல்லாமல் இல்லை. மாநில—மத்திய அரசுகளிடையே அதிகாரங்களைப் பங்கீடு செய்த பொழுது இருந்த நிலை இப்பொழுது இல்லை. பிரத்தியட்ச நிலைமையில் புதிய சங்கடங்கள் தோன்றியுள்ளன. அவற்றைப் போக்க மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியம்."

இது, 6-5-1962ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கூட்டத்தில் டி. டி. கே. பேசியது. அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியவரே அதைத்திருத்த வேண்டுமென்று சொல்லுகிறுர்.

நம்முடைய மதிப்பிற்கும் பெருமைக்கும் உரிய காமராசர் சொல்லுகிறுர்:

"மத்திய சர்க்காரில் ஒரு கட்சி ஆட்சி. மாநிலங்களில் வேறு கட்சிகளின் ஆட்சி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படும் என்பதை 20 ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் சட்டத்தை உரு

வாக்கியவர்கள் எதிர்பார்க்கவில்லை. (எதிர்பார்க்காதது அவர்கள் செய்த தவறு.)

"இன்று அந்தப் புதிய நிலை உருவாகிவிட்டபடியால் மத்திய—மாநில உறவு பற்றியும் அதிகாரம் பற்றியும் நிர்ணயிப்பது அவசியம். எனவே, முதலமைச்சர்கள் மாநாட்டை பிரதமர் இந்திரா காந்தி உடனடியாகக் கூட்டி இதுபற்றி முடிவு எடுக்க வேண்டும். 1972 தேர்தலுக்குப் பின்னால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா அல்லது கூட்டாட்சி ஏற்படுமா என்று இப்பொழுது கூற முடியாது. எனவே மத்திய—மாநில அரசுகள் உறவு பற்றி இப்போதே பேசி முடிவு எடுக்கவேண்டும். இல்லையேல் தேசத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படும்."

17-3-1969 அன்று காங்கிரஸ் கட்சி பிளவுபடாத காலத்தில்—சென்னை தேனும்பேட்டை காங்கிரஸ் திடலில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் காமராசர் பேசி, பத்திரிகைகளில் வெளியானது.

இன்று காமராசருக்கு டில்லி ஆட்சி மீது செல்வாக்கில்லை. ஆகவே, முன்பு அவர் சொன்னதை வைத்து இன்று நான் அவரைக் குறைத்துப் பேசவில்லை. 'தேச பக்தர்கள், தேசியவாதிகள்' என்று நண்பர் சக்திமோகன் அவர்கள் சொன்னாரே, அந்த வட்டாரம்கூட மாநில சுயாட்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது என்பதைக் காட்டவே இவ்வளவும் சொல்கிறேன்.

இந்தியாவின் சுதந்திரம் என்பதே மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதுதான் என்று பிரிட்டிஷாரே சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நாட்டின் சுதந்திரம் என்ற கருத்தில் அவர்கள் இருந்தார்கள். மிண்டோ—மார்லி ரிபார்ம்ஸ் என்று முதலில் கொடுத்தார்கள். அதன்படி, மத்திய அதிகாரங்களில் பல மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதன் பிறகு 'மாண்டேகு செம்ஸ்போர்டு ரிபார்ம்ஸ்' என்று கொண்டு வந்தார்கள். அது, மேலும் மத்திய அதி

காரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்தது. பிறகு 1935-ம் ஆண்டு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது இன்னும் மத்திய அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. இந்த 1935-ஆம் ஆண்டு சட்ட அரங் கேற்றம் நடைபெற்றபோது வைசிராய் சொன்னார், "முழு அளவுக்கு மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுப்பது பிரிட்டிஷ் சர்க்காருடைய கொள்கையாகும்" என்று.

1946ம் ஆண்டு பிரிட்டிஷ் கேபினட் மிஷின் வந்தபோது வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து—சுங்கங்கூட இல்லை; நாணயச் செலாவணிகூட இல்லை—இந்த மூன்றும் மத்திய அரசுக்கென்று விட்டுவிட்டார்கள். அப்பொழுது காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் எழுதிக் கேட்டார்கள், "அன்னிய உறவு" என்றால் அதிலே வாணிபம் உண்டா?" என்று. அதை உங்களுக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். "அன்னிய அரசியல் உறவைத்தான் நாங்கள் நினைத்தோம்; ஆகவே, வாணிபம் மாநிலங்களுக்கா, மத்திய அரசுக்கா என்பதைப் பேசி முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார்கள்.

இன்னும் அவர்கள் "மத்திய அரசுக்குக் கிடைக்கின்ற—குறிப்பாக, போக்குவரத்து மூலம் கிடைக்கிற வருவாய் போதாவென்றால், மாநிலங்களிடம் மானியம் பெறலாம்"—என்றார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கம் மாநிலங் களுக்கு மானியம் கொடுக்கும் பழக்கம் இருக்கிறது. இதற்கு மாறாக, மாகாணங்களிடமிருந்து மத்திய அரசு மானியம் கேட்கின்ற நிலைமை வந்தால், அப்போதுதான் மானியம் கேட்பதனுடைய நிலைமை எவ்வாறு இருக்கும் என்பது மத்திய அரசுக்குப் புரியும். அந்தக் காலத்தில் சிற்றரசுகள் கொடுக்கின்ற கப்பப் பணத்தைத்தான் பேரரசுகள் செலவழித் தன. நான் மத்திய அரசைப் பயமுறுத்த விரும்பவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி, படிப்படியாக சுயாட்சியளித்து வந்து, 1947ல் முழு அளவு சுயாட்சி கொடுத்துவிட்டு வெளியேறியது.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கு மிக்க வேதனை யோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்; நான் உங்க ளோடு சேர்ந்து பாடுபட்டவன். நான் பிறந்து, எனக்குப் புத்தி தெரிந்த நாளிலிருந்து தமிழை நேசித்து வருகிறேன். "பிறந்து மொழி பயின்ற நாளெல்லாம் சிறந்து உன் சேவடியே சிந்திக்கப் பெற்றேன்" என்று தெய்வத்திடம் கூறுகிறார் காரைக்கால் அம்மையார். நானும் பிறந்து, பின் மொழி பயின்ற நாள் முதற்கொண்டு தமிழ் அன்னையின் சேவடியே சிந்திக்கப் பெற்றேன்.

ஆகஸ்டுப் புரட்சியில் ஈடுபட்டு மத்திய மாநிலச் சிறையில் இருந்தேன். அப்போது, 14 ரூபாய் சம்பளம் பெற்ற அச்சுத் தொழிலாளியாக—பரம ஏழையாக—இருந்தேன். ஏழ்மைக்குரிய அந்தத் தொழிலையும் தூக்கி எறிந்துவிட்டு, வயது வந்த ஒரே தங்கையையும், இளம் தம்பியையும், வயது முதிர்ந்த பெற்றோரையும் ஆண்டவனே காப்பாற்றட்டும் என்று சொல்லி விட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர் களோடு சேர்ந்து சிறை புகுந்தேன். நான் இருந்த சிறையில் மின்சார விளக்குகள் இல்லை; மின்சார விசிறி இல்லை. 120 டிகிரி வெயில் காய்கின்ற இடம்; குளிரிலும் வெயிலிலும் வேதனைப் பட்டுக் கொண்டு இரவிலே 'பாரா உஷார், பாரா உஷார்' என்று மராட்டிய மொழியில் காவலர் போடும் சப்தத்தைக் கேட்டுக் கொண்டு, வயிற்று வலியோடு நித்த நித்தம் போராடிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில்—வயிற்று வலியோடு—அந்தச் சிறையில் துணிவுடன் இருக்க என்னால் எப்படி முடிந்தது?

இந்தியா சுதந்திரம் பெற்றால், நமது தமிழ்நாடு சுயாட்சி பெறும். இந்தியா சுதந்திரம் பெற்றால், நமது தாய்நாடு தமிழ் மொழியில் ஆளப்படும்; கடையகனான உழவனும் கண் விழிப்பான். "பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வார்" என்று பாரதி சொன்னானே, அதை நினைத்தேன்; தமிழ் மொழியில் ஆளப்பட வாய்ப்பு கிடைக்கும்; அச்சுத் தொழிலாளியான அடியேனுக்குக்கூட

விமோசனம் கிடைக்கும் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன்; இதுதானு நாம் கேட்ட சுதந்திரம்? இதற்குத்தானு நாம் பாடுபட்டோம்?

வீரபாண்டியக் கட்டபொம்மன் சுதந்திரம் கேட்டது பாஞ்சாலங்குறிச்சிக்குத்தான்! அந்தச் சுதந்திரம் இந்தியா பூராவுக்கும் வளரட்டும் என்ற எண்ணத்தில்தான் கேட்டான். ஜான்ஸி ராணி சுதந்திரம் கேட்டது ஜான்ஸி சமஸ்தானத்திற்கு மட்டும்தான். தாத்தியா தோபேயும் நாணுவும் போராடியது, அவர்கள் இழந்துவிட்ட மஹாராஷ்டிரத்தைக் கைப்பற்றத்தான். திப்பு சுல்தான் போராடியது மைசூர் (கன்னட) ராஜ்யத்தைக் காப்பதற்காகத்தான்.

சுதந்திர இயக்கம் எப்படி வளர்ந்தது? "வங்கம் வங்காளியருக்கே" என்பதில்தான் பிறந்தது. வங்காளத்தை கர்சான் இரண்டாகத் துண்டாடிய போது, "வங்கம் வங்காளியர்களுக்கே; அதைத் துண்டாடாதே" என்று தேசபக்தர்கள் சொன்னுர்கள். மொழிவழி இன உணர்ச்சியோடுதான் இந்தியச் சுதந்திரப் போரில் இணைந்தது வங்கம். இன்னும் என்ன நடந்தது? காங்கிரஸ் கட்சி மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதில் கவனம் செலுத்தியது.

சுப்பிரமணிய பாரதியார் சொல்கிருர்—சுதந்திர நாட்டை கவிஞர் கற்பனைசெய்து பார்க்கிருர். தாயின் மணிக்கொடி பறக்கிறதாம்; ஆம், அவர் கற்பனையில் பார்க்கிருர் தாயின் மணிக்கொடி பறக்கிறதை! அந்தக்கொடியின் கீழே இந்திய ராணுவம் அணி அணியாகப் பிரிந்து நிற்கிறதாம். அது, இந்து அணி, இஸ்லாமியர் அணி, சீக்கியர் அணி, கிறிஸ்தவர் அணி என்று நிற்கிறதா?-இல்லை, ஐயர் அணி, ஐயங்கார் அணி, முதலியார் அணி, நாடார் அணி என்று நிற்கிறதா?—இல்லை, வடக்கு அணி, தெற்கு அணி, மேற்கு அணி, கிழக்கு அணி—என்று நிற்கிறதா? அப்படியும் இல்லை. அது எப்படி நிற்கிறதாம்? "செந்தமிழ் நாட்டுப் பொருநர்; சேரத்து வீரர்; சிந்தை துணிந்த தெலுங்கர்; கன்னட வீரர்; பஞ்சநதத்துப் பிறந்தோர்-முன்னர் பார்த்தன் முதற்பல வாழ்ந்தர்

நன்ளுட்டார்; துஞ்சும் பொழுதினும் தாயின் பதத்தொண்டு நினைத்திடும் வங்கத்தினோர்—என, இனவாரி அணி பிரிந்து நிற்கிருர்களாம்! "அந்த அற்புதக் காட்சி ஓர் ஆனந்தம் அன்றோ!" என்கின்றுர் கவிஞர்.

ராணுவத்தையும் மொழிவாரி இனங்களாகப் பிரித்து சுதந்திரக் கொடியின் கீழ் நிறுத்துகிருர் பாரதி. யாரோ கேட்பது போன்று அவருடைய இதயத்தில் ஒரு எதிரொலி எழுந்தது. 'இவ்வாறு மொழிவாரி ராணுவத்தை அமைத் தால் நாடு அழிந்து விடாதா? இனவெறியர்களை நம்பலாமா?' என்று யாரேனும் அவரைக் கேட்டிருக்கலாம். அவர்களுக்கு பாரதியார், "நம்பற்குரியர் அவ்வீரர், தங்கள் நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்" என்கிருர்.

டெல்லியில் இருக்கின்றவர்களுக்கு மாநிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் குணம் இல்லை என்று சொன்னுல், டெல்லியில் இருக்கின்றவர்களுக்கு ஏகாதிபத்தியப் போக்கு இல்லையென்று சொன்னுல், என்னுடைய இன உணர்ச்சிக்கு அவர்கள் எதிரியில்லை என்று சொல்லட்டும். அவர்கள் தேச பக்தியை நான் நம்புகிறேன். அவர்கள் என்னுடைய இன உணர்ச்சியை, தேச பக்தியை மதிக்கட்டும்; நம்பட்டும்.

இப்பொழுதுள்ள பிரச்சினை ஸ்டேட்—சென்ட்ரல் ரிலே ஷன்ஷிப் அல்ல—அதாவது, மைய—மாநில உறவுப் பிரச்சினை அல்ல. இது மொழிவாரி தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினை. நண்பர் கு. மா. பாலசுப்பிரமணியம் நேற்று இங்கு சொன்னது போல், சுயாட்சி கேட்பது மொழிவாரித் தேசிய இனங்களுடைய பிறப்புரிமையாகும். இந்தியாவில் ஏதேனும் ஒரு மொழி வழி இனம் சுதந்திரம் கேட்பதற்குத் தகுதி பெற்றிருக்கிறது என்ருல், அது தமிழ் நாடாகத்தான் இருக்க முடியும். ஆனுல், நாம் தமிழ்நாடு—தமிழ் மொழி—தமிழ் இனம் என்று சொல்லிக் கொண்டு பிளவுபட வேண் டிய அவசியமில்லை. இராஜ ராஜ சோழன் காலமல்ல இது. கரிகால் வளவன் காலமல்ல இது—ராஜேந்திர சோழன் கால மல்ல இது. எனக்கு விளங்குகிறது. அதனுற்றுன், நாமே

விரும்பி, சில அதிகாரங்களை மத்தியில் வைக்கிறோம். அதுதான் ஒருமைப் பாட்டிற்காக நாம் கொடுக்கின்ற அதிகப்படியான விலை. "சிங்களம் புட்பகம் சாவகமாதிய தீவு பலவினும் சென்றேறி—அங்கு தங்கள் புலிக்கொடி, மீன் கொடியும் நின்று சால்புறக் கண்டவர் தாய்நாடு", "விண்ணை இடிக்கும் தலை இமயம்-எனும், வெற்பை அடிக்கும் திறனுடையார்—சமர்பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார்-தமிழ்ப் பார்த்திவர் நின்ற தமிழ்நாடு", "செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்றெல்லாம் பாரதியார் பாடினார். நாம் சரித்திரத்தால் மட்டுமல்ல; நில அமைப்பாலும் தென்கோடியில் இருக்கிறோம். ஆகவே, மத்திய ஆட்சி நமக்கு நெடுந்தொலைவில் இருக்கிறது.

ஒன்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். யாரையும் குறை கூற வேண்டுமென்று இதை நான் சொல்லவில்லை. நிலைமையை விளக்குவதற்காகச் சொல்லுகிறேன்.

டெல்லி செக்ரெட்டேரியட்டுக்குள் நுழைந்தால் அங்கே நாம் அயல் நாட்டில் இருப்பது போன்று தோன்றுகிறது. மதிப்பிற்குரிய சித்ரா நாராயணசாமி, நண்பர் ஜி. சுவாமிநாதன் போன்றவர்களுக்கு வேண்டுமானால், டில்லியில் உள்ளவர்களைப் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். தாய்மொழியையே நம்பியுள்ள என்போன்றோர் டெல்லி வீதிகளில் உலாவினால், மாஸ்கோ—பாரிஸ் வீதிகளில் உலவுவது போன்ற உணர்வு தான் ஏற்படுகின்றது. பாரிசுக்கும் டெல்லிக்கும் எந்தவிதமான வேற்றுமையும் தெரியவில்லை. இந்தத் தன்மையைத் தான் நம்முடைய கூட்டாட்சியில் நம்மால் பார்க்க முடிகிறது. உத்தரப்பிரதேசத்திலிருந்து வருகிறவர்களிடமும், ஹரியானா-மத்திய பிரதேசங்களிலிருந்து வருகின்றவர்களிடமும் அந்த டெல்லி செக்ரெட்டேரியட்டில் இருக்கின்ற சாதாரண சிப்பந்திகள், தலைமை அதிகாரிகள் உணர்வு பூர்வமான உறவைக் காட்டுகிறார்கள். அந்த உறவு நம்மிடம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இது பிறப்பு வழியால் ஏற்படுகின்ற வேற்றுமை. ஆகவே, அதிகாரப் பங்கீட்டின் மூல

மாகத்தான் இதைச் சமாளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேற்றுகூட நண்பர் திரு. அப்துல் வஹாப் சொன்னது போன்று காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சியின் ஆட்சி இங்கு தான் நடக்கிறது, வேறு கட்சிகளின் துணை இல்லாமல்! ஆகவே எதிர்க்கட்சி ஆட்சி உள்ள மாநிலம் சுயாட்சிக் குரலைக் கிளப்புகிறது. இனி மாநிலங்களில் ஆட்சிக்கு வருகிற எதிர்க்கட்சிகளெல்லாம் இப்படித்தான் கிளப்பும் என்பதற்கு இதுவே அத்தாட்சி. 'மற்ற மாநிலங்களிலெல்லாம் கேட்க வில்லை; நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?' என்பதிலே என்ன நியா யம் இருக்கிறது? எப்படி, ஆளுகிற காங்கிரஸ் கட்சியிட முள்ள மாநிலம் சுயாட்சி கேட்க முடியும்? அரிசி கேட்ட தற்கே மந்திரி சபை கவிழ்ந்து விட்டதே குஜராத்திலே! இதை நான் சொல்லவில்லை. குஜராத் முதல்வர் சிமன்பாய் படேல் சொன்னார். கட்சிக் கட்டுப்பாடு மூலம் மத்திய அரசின் பயமுறுத்தல் இல்லாத மாகாணம் இது. ஆகவே, இங்கு சுயாட்சி உணர்ச்சி பிய்த்துக்கொண்டு வருகிறது.

இன்னொன்று; ஏறக்குறைய நாம் சோசலிசத்தைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டு விட்ட காலம் இது. நான் கேட்கிறேன், மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்கிற நிலையில் சோசலிசம் வரும் என்று சத்தியமாக நம்பமுடியுமா? இதுபற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தலைவர் திரு. காமராசர் அப்படி நம்புகிறாரா? அங்கே மத்தியில் அதி காரங்கள் குவிக்கப்பட்டு, லைசென்ஸ்களும் பெர்மிட்களும் இந்தியா முழுவதுக்குமாக ஒரு சிலரிடம் கொடுப்பதென்றால், டாடா, பிர்லா, டால்மியா சட்டைப்பையில்தான் அவை போய்ச் சேரும். அதிகாரங்களை, மத்தியில் குவித்ததன் விளைவு இது. தொழில் அதிகாரங்கள், வாணிப அதிகாரங்கள் ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டு விட்டால், உடனே சோசலிசம் வந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. பெரிய முதலாளித் துவம் கரைவதற்குத் தொடக்கமாக அது அமையக் கூடும். சோசலிசத்தை உண்மையாக நம்புகிற யாரும் அதிகாரப்

பரவல் முறையை, சுயாட்சி முறையை ஆதரித்தாக வேண்டும். அவர்கள்கூட எதிர்ப்பது சோசலிசத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்பதற்கு அடையாளமாகும்.

ஆங்கில ஆதிக்கம் என் காலத்திலேயே அழிந்து போகுமானால், நான் சொர்க்கத்திற்குப் போவேன். என் வாழ்நாளில் ஆங்கில ஆதிக்கம் அழியாது என்றால், அன்னை மொழிக்காகப் பாடுபட நான் மீண்டும் பிறப்பதற்கே விரும்புகிறேன். அந்தப் பிறப்பையும் தமிழ் நாட்டில் எடுப்பதற்கே விரும்புகிறேன். தமிழ் நாட்டிலேயும் கலைஞருடைய தோழனாக இருந்து தமிழுக்கு வாழ்வு தேடுகிற நிலையையே விரும்புகிறேன். ஆங்கில ஆதிக்கம் எப்படிப் போகும்? அதுதான் பிரச்சினை.

மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டதன் விளைவாக மத்திய அரசு வேலைக்குப் போவதற்கு அங்கே ஆட்சிமொழி எதுவோ அதை இங்குள்ள எல்லோரும் படித்தாக வேண்டியிருக்கிறது. ஆம்; கல்வி பயிலும் கட்டம் முழுவதிலும் படித்தாக வேண்டும். மத்திக்கு யார் வேலைக்குப் போவார், எந்த வேலைக்குப் போவார் என்பது தெரியாததால் கல்வி கட்டம் முழுவதும் தாய் மொழி அல்லாத மத்திய ஆட்சி மொழியைப் படித்தாக வேண்டும்.

இன்று ஆங்கிலம் மத்தியில் ஆட்சி மொழியாக இருப்பதால் அதைப் படிக்கிறோம். ஆங்கிலம் போய் இந்தியை மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அப்போது, அதையும் இங்குள்ள எல்லோரும் படித்தாக வேண்டும். நான் கேட்கிறேன்; ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிப் படிப்பு வரை நம்மவர்கள் ஆங்கிலத்தைக் கட்டாய மொழியாகப் படித்ததால் என்ன ஆனது? நம்முடைய சிவிலிசேஷன் மாறியது. நாம் ஐரோப்பிய நாகரீகத்திற்கு அடிமையாகி விட்டோம்.

இந்த நிலைமையில் ஆங்கிலத்திற்குப் பதில் ஹிந்தி வருமானல்—ஹிந்தியர்களுக்கும் நமக்கும் நாகரிகத்தில் சிறிதளவு

வேறுபாடு உண்டு என்பதை மறக்கவேண்டாம்—நாம் வடவர் நாகரிகத்திற்கு அடிமையாவோம். இந்தியைக் கீழ் மட்டத்தி லிருந்து மேல் மட்டம்வரை கட்டாய பாடமாகப் படித்தா லொழிய மத்திய சர்வீசில் நம்மவர்கள் உயர்தர வேலைக்குப் போக முடியாது. இப்போது ஆங்கிலம் படித்த ஆங்கிலேய னோடு நமக்குப் போட்டியில்லை. ஆங்கிலேயன் வெளியேறி விட்ட பிறகு வடவரோடு இதிலே நாம் சம நிலையில் இருக் கிறோம். இந்தி வருமானால், இந்தி படித்த இந்திக்காரன் திறமையை இந்தி படித்த இந்திக்காரன் அல்லாத தமிழன் பெற முடியாது.

இந்நிலையில், மத்தியில் இந்தி ஆட்சி மொழியாக வருமா னால், அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நான், எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும் காங்கிரஸ் நண்பர்களுக்கும் ஒன்று சொல்லுகிறேன். தேச பக்தியில் ஊறிய நான் இந்தியை எதிர்ப்பதற்கு இதுதான் காரணம். ஆங்கில ஆதிக்கம் தமிழகத்தில் இன்றே அகற்றப்பட வேண்டுமென்று சொல்கிற நான், மத்தியில் மட்டும் ஆங்கிலம் ஒரு இடைக் காலத்திற்கு இருக்க வேண்டுமென்று சொல்கிறேன் என்றால், அதற்குக் காரணம் இதுதான்; கல்வியின் எல்லாக் கட்டங் களிலும் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்கி, அதன் ஆதிக்க நிலையை ஏற்பதுபற்றி என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

மத்தியில் அதிகாரங்களைக் குவித்திருப்பதால் என்ன ஆகிறது? அங்கு உத்தியோகங்களும் குவிந்திருக்கின்றன. மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கினால், மத்திய ஆதிக்கத்தி லிருந்து மாநிலத்திற்குத் திரும்புகிற அதிகாரங்கள் இந்தி மண்டலத்திலிருந்து அல்லது இங்கிலீஷ் மண்டலத்திலிருந்து தமிழ் மண்டலத்திற்கு வருகின்றன என்று பொருள்.

பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உறவு இந்த மூன்றுந்தான் மத்தியில் என்றால், அப்புறம் அங்குள்ள உத்தி யோகங்கள் எவ்வளவு என்று தூரதிருஷ்டிக் கண்ணாடியால்

பார்க்க வேண்டும். ஆம்; அந்த அளவுக்குக் குறைந்துவிடும். அப்படிப் பார்க்கிறபோது மொழிப் பிரச்னை தீருவதற்கும் சுயாட்சிதான் வழி என்பதை நாம் மறந்துவிட வேண்டா மென்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக் கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் என்ன செய்யப் போகிறது? அது எனக்குத் தெரியவேண்டும். தீர்மானம் அங்கு — பேரவையில்—நிறைவேறி விட்டது. இங்கும் நிறைவேற்றப் போகிறோம். இதற்கப்புறம் என்ன நிலைமை? மாநில சுயாட்சியை கொள்கை ரீதியில் கூட மத்தியி லுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். அதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மாநில சுயாட்சி பற்றிப் பிரசாரம் வேண்டுமென்று முதல்வரவர்கள் சொன்னார்கள். அவர் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். நாளைக்குச் சென்னையில் மயிலையில் நானும் கலைஞரும் பேசுகிறோம்— மாநில சுயாட்சிப் பிரச்சாரம்தான். ஆனால் ஒன்றை மறந்து விடவேண்டாம்-அதாவது, இந்த விஷயத்தில் நாம் போதிய அளவு பிரச்சாரம் செய்திருக்கிறோம்! எனக்கு முந்தியே நீங்கள் பிரச்சாரம் தொடங்கினீர்கள். நீங்கள் பிரிவினை கேட்ட காலத்தில்கூட, மத்திய ஆதிக்கத்தை எதிர்க்கிற அளவிலே-மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டதால் மக்கள் படுகிற வேதனைகளை விளக்கியிருக்கிறீர்கள். 1939ஆம் ஆண்டி லிருந்தே அந்தப் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று தொடங்கிய நாளிலிருந்து பிரச்சாரம் செய்து வருகிறீர்கள். ‘திராவிட நாடு திரா விடருக்கே’ என்று மாறிய நாளிலிருந்தும் பிரச்சாரம் செய் திருக்கிறீர்கள். மாநில சுயாட்சியை ஏற்றுக்கொண்ட நாளி லிருந்தும் பிரச்சாரம் செய்து வருகிறோம்.

இன்னும் மாநில சுயாட்சி கோரும் வட்டாரத்திற்கு வெளியே இருக்கிற கட்சிகளும். ஜெயப்பிரகாசர், ராஜாஜி

போன்ற தலைவர்களும் இதைப் பேசி, இதற்கு அகில இந்திய முக்கியத்துவம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வள வுக்குப் பின்னும் நாம் இனியும் பிரச்சார அளவில்தான் நிற்போம் என்றால், எங்கோ சிக்கல் இருக்கிறதென்று நான் ஐயுறுகிறேன் — அச்சப்படுகிறேன். தெளிவு வேண்டும், முதல்வரவர்களிடமிருந்து—ஆளும் கட்சியிடமிருந்து—ஆட்சி யிடமிருந்து. இந்தத் தீர்மானத்தில் கால வரம்பு வைத்து— அந்தக் கால வரம்பிற்குள் மத்திய ஆட்சியின் பதில் எங்களுக் குத் தேவை என்று கேட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். மத்திய அரசோடு மோதுகிறோம் என்ற பொருளில் இதை நான் சொல்லவில்லை. அவர்களுக்கு வசதி செய்து கொடுக் கிறோம் என்று பொருள். அவர்கள் விளக்கம் கொடுப்பதற்கு கால வரம்பு, அவகாசம் கொடுக்கிறோம் என்று பொருள். இது எதுவுமில்லாமல் இன்னும் பிரச்சாரம்தான் செய்து கொண்டிருப்போம் என்றால், முதல்வர் ஒன்றை மறந்துவிட வேண்டாம்.

1969 ஆகஸ்டில் நான் பேரவையில் சுயாட்சித் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், அந்த மன்றத்தில் இருந்த எல்லாக் கட்சிகளும் ஆதரித்தன. ஆனால் காங்கிரஸ் கட்சி மௌனம் சாதித்தது. ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை. ஆனால் இப்போது என்ன நடக்கிறது? அன்று ஆதரித்த கட்சிகள் இன்று மனமாற்றம் அடைந்துவிட்டன. ஆக, நாம் நடவடிக்கை எடுக்க தாமதிப்பதனால், அது நம்மையே பல வீனப்படுத்துகிறது என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் தாமதிக்க அவசியமில்லை, தேவையில்லை என்று எண்ணுகிறேன். முதல்வர் அவர்கள் சுதந்திரம் உள்ள கட்சிக்காரர். நான் தோழன்தான்; என்றா லும், வராந்தாவில்தான் இருக்கிறேன். அவர்கள் மாளிகைக் குள்ளே இருப்பவன் அல்ல. சில நேரங்களில் கூப்பிடுகிறார்கள்; அப்போது உள்ளே போகிறேன். திரும்பி வெளியே வந்து விடுகிறேன்.

தி. மு. க. வினர் கடந்த ஆண்டு ஆகஸ்டு 19ஆம் தேதி மாநில சுயாட்சி நாள் கொண்டாடினார்கள். அப்போது,

தாங்களேதான் கொண்டாடிக் கொண்டார்கள். நான்கூட நினைத்தேன். 'நம்மையும் விருந்தாளியாகவேனும் அழைத்திருக்கலாமே' என்று. லிமிடெட் நம்பர் வைத்து விருந்து நடக்கிறது போலும் என்று நினைத்துக்கொண்டு ஒரு விதமாக ஆறுதல் அடைந்தேன்.

செழியன் குழுவை நியமித்து, ராசமன்னர் பரிந்துரை பற்றி ஆராய்ந்து அறிக்கை தரச் செய்தார்கள். என்னையும் அந்தக் குழுவில் சேர்த்திருக்கலாம்—சேர்க்கவில்லை. எனக்கு ஆங்கிலம் தெரியாது என்று எண்ணினார்களோ என்று நான் ஐயுற்றேன். கலைஞர் அவர்கள் அப்படி எண்ணமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். வேறு யாரேனும் சொன்னார்களோ என்று ஐயுற்றேன்.

செழியன் குழுவினர் என்னை சாட்சியத்திற்கு அழைத்தார்களா என்றால், அதுவும் இல்லை. இராசமன்னர் குழுவே என்னை சாட்சியத்திற்கு அழைத்திருக்கிறபோது, முன்னாள் தலைமை நீதிபதிகளே என்னை அழைத்திருக்கிறபோது, செழியன் குழுவினர், இராசமன்னர் குழு பரிந்துரைபற்றி என்னுடைய கருத்தைத் தெரிந்து கொண்டு தங்கள் அறிக்கையைத் தயாரித்திருக்கலாம். அறிக்கை தயாரித்த பிறகாவது அதன் பிரதி ஒன்றை எனக்கு அனுப்பியிருந்திருக்கலாம். இதுவரை செழியன் குழுவின் அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை. தாயும் சேயும் என்றாலும் வாயும் வயிறும் வேறுதான் என்பதில் உள்ள உண்மையை நான் உணர முடிகிறது. அவர்களுக்கு ஆணையிடுகிற அதிகாரம் எனக்கு இல்லை.

**27-4-74 அன்று சட்ட மேலவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீதான தமது ஒரு மணிநேரப் பேச்சை முடிக்கையில் உணர்ச்சிப் பெருக்குடன் மாண்புமிகு ம. பொ. சி. கூறியது வருமாறு :**

யாரோ சொன்னார்களாம், "ம. பொ. சி. யின் கொள்கையைக் கலைஞர் எடுத்துக் கொண்டார்" என்று. ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல— அடக்கத்தால் மட்டுமல்ல— சத்தியமாகவும் சொல்கிறேன்; இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தம் அல்ல. இது, அகில உலகின் அரசியல் சாத்திரம்— சரித்திரம். 1781ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சகாப்தம், பின்னால் விரிவடைந்து வருகிறது. நாடு நாடாகப் பவனி வருகிறது. அதற்காக ஒரு இயக்கத்தைத் துவக்கினவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமே யொழிய, சுயாட்சித் தத்துவமே எனக்கு ஏகபோகமல்ல. கலைஞர் என் கையில் இல்லை. நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன்—அவரது ஆட்சியையும் வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எங்கோ கிடந்த எளியவனாகிய என்னை அழைத்து வந்து செக்ரடேரியட்டில் எனக்கு ஒரு அறை (ரூம் கொடுத்து) என்னை இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன்; நான் இப்படி நெடு நாட்கள் அறைக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்பவில்லை. அந்த அறையை விட்டு, இந்த மாநில சுயாட்சிக்காகச் சிறை புகவே விரும்புகிறேன். உங்கள் ராஜ்யத்தின் சிறைச் சாலைகளிலே எனக்கும் என் தோழர்களுக்கும் இடம் பார்த்து வையுங்கள்; அந்தச் சிறைச் சாலைகளின் அறைகளைத் திறந்துவையுங்கள்! இன்னொருமுறை இந்த ஏழைத்தொண்டன்—நோயாளியாக உள்ள நிலையில்— சிறையில் அடைபட்டு அங்கு உயிர் விடுவேனானால், எனது

அஸ்தியிலிருந்து தோன்றுகிற பல லட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேட, எனனைவிட 19 வயது குறைந்தவரான கலைஞர் அவர்களுக்கு உதவி செய்வார்கள். சுயாட்சித் தமிழகத்தின் முதல்வராகவும், அல்லது சுயாட்சிக் குடியரசின் தலைவராகவும் வருகிற வாய்ப்பை அவருக்குக் கொடுக்க விரும்புகிறேன். எனக்கு சிறைச்சாலையில் இடம் கொடுங்கள்' என்று இரு கை கூப்பி ஆளுவோரை வேண்டு கிறேன்; முடிவு உங்கள் கையில் இருக்கிறது. வணக்கம்.

# 'ம. பொ. சி. யுடன் சிறை புகுவேன்!'

## முதல்வர் கலைஞர் உறுதி

27-4-74 அன்று சுயாட்சித் தீர்மானம் பற்றிய விவாதத்தை முடித்து வைத்து முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி பேசுகையில் ம. பொ. சி. பற்றிக் கூறியது வருமாறு:

**நாம்** நமது மாநிலத்திற்கு சுயாட்சி பெறப் போராட வேண்டுமென்று தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் கூறினார். "சிறைக்குச் செல்லத் தயார்" என்றார். அப்படி ஒரு நிலைமை தவிர்க்க முடியாதது என்றால், நானும் அவருடன் சிறையில் இருப்பேன். அவரைத் தனியாக விட மாட்டேன்; என் அரசியல் பொது வாழ்வில் இந்தத் தீர்மானத்தை இரு அவையிலும் நிறைவேற்றியதன் மூலம் நான் ஒரு பெரிய கடமையைச் செய்து முடித்ததாகவே கருதுகிறேன். இந்தக் கடமையில் வெற்றி பெறப் பதவியையும் பொருட்படுத்தாமல் பணியாற்றும் உரிய காலம் விரைவில் வரும் என்றே எதிர்பார்க்கிறேன். நம்புகிறேன்—தயாராக இருக்கிறேன்.

# சிவஞானத்தோடு சேர்ந்தது தவறு?

## முதல்வர் கலைஞர் கேள்வி

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 27-4-74ல் சட்ட மேலவையிலும், 28-4-74ல் மயிலைப் பொதுக்கூட்டதிலும் மாநில சுயாட்சி பற்றிப் பேசியபோது தமிழரசுக் கழகம் பற்றியும் தலைவர் ம. பொ. சி. பற்றியும் வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:

"அண்ணா எழுதிய உயிலிலே கூட அதிக அதிகாரம்தானே கேட்டார். மாநில சுயாட்சி கேட்டாரா?-இல்லை. இந்தக் கருணாநிதிதான் வெட்கங் கெட்டுப்போய் மாநில சுயாட்சிக் கொள்கையை ம, பொ. சி.யிடம் கடன் வாங்கிக் கொண்டார்" என்றார்கள்.

நான் அதற்கு வெட்கப்படவில்லை. நல்லவற்றைக் கடன் வாங்குவது தவறல்ல. ம. பொ. சி. யிடம் போயும் போயும் இந்தக் கொள்கையைக் கடன் வாங்கினார்கள்— என்றார்கள்.

நான் அவரை சிலம்புச் செல்வர் என்றுதான் அழைப்பது வழக்கம்—சிவஞானத்திடத்திலே போய் இதைக் கேட்கலாமா? சிவஞானத்தோடு சேர்ந்து கேட்கலாமா?-என்கிறார்களே-பிறகென்ன, ஞானத்தோடு சேர்ந்து கேட்காமல் அஞ்ஞானத்தோடு சேர்ந்தா கேட்க முடியும்?

அதுவும் சாதாரண ஞானமல்ல, சிவஞானம்! அன்பே சிவம். ஞானம் என்றால், அறிவு. அன்போடும் அறிவோடும் நான் மாநில சுயாட்சி கேட்கிறேன்.

மாநில சுயாட்சி சிலம்புச் செல்வரவர்களால் நீண்ட நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிற-வலியுறுத்தப்பட்டு வருகின்ற உன்னதமான கொள்கையாகும்.

மாநில சுயாட்சி என்பது சிலம்புச் செல்வர் அவர்களால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட வார்த்தையா என்றால், இல்லை; ஆனால், மாநில சுயாட்சி என்கிற ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு, சுயாட்சித் தன்மையில்லாத அளவுக்கு மாநிலங்கள் எல்லாம் ஆக்கப்பட்டு, அதற்கேற்ப ஒரு அரசியல் சட்டமும் வகுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், அந்த அரசியல் சட்டம் திருத்தப்பட்டு மாற்றப்பட்டு மாநில சுயாட்சி பெயரளவில் இல்லாமல் முழுமையான சுயாட்சியாக மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு, உண்மையான கூட்டாட்சி மத்தியிலே விளங்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திய பெருமை சிலம்புச் செல்வரையே சாரும்.

நாங்கள் மாநில சுயாட்சி கேட்கிறோம். தமிழரசுக் கழகம் இன்று ஆளுங் கட்சியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஆளுகிற தி. மு. கழகத்தைப் பார்த்து, தானே ஆளுவது போன்ற உணர்வோடு இருக்கிற தோழமைக் கட்சி தமிழரசுக் கழகம்.

நாளைக்கே தி. மு. கழகத்தைப் பார்த்து, 'நீ மாநில சுயாட்சி கேட்கிறாய்; ஆகவே, உன் அரசாங்கத்தைக் கலைக்கிறேன்' என்று டெல்லியிலிருந்து உத்தரவு வருமேயானால், அதைவிட என்னுடைய வாழ்க்கையிலே புனிதமான சரித்திரச் சம்பவம் வேறு எதுவுமே இருக்க முடியாது.

எனக்கோ, சிலம்புச் செல்வருக்கோ போராட்டம் புதிதல்ல, பழக்கப்பட்ட ஒன்று. சிறைச்சாலை, நாங்கள் போய் போய் வந்த - 'போகிறேன்' என்று சொல்லாமல், 'போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு வந்த பழைய வீடுதான்!

ஒரு சோதனைக்காவது நான் சொல்லுகிறேன்; உறுதியாக அல்ல நான் சொல்லுவது; தி. மு. கழகத்தின் கொள்கையோ, தமிழரசுக் கழகத்தின் எண்ணமோ அல்ல! ஒரு பேச்சுக்குச் சொல்லுகிறேன்;

பத்தாண்டு காலத்திற்கு மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுத்துச் சோதித்துப் பாருங்களேன், இந்தியா உடைந்து போய் விடுகிறதா என்று.

எனக்கு இருக்கிற பயமெல்லாம் நீங்கள் அந்தச் சோதனைக்கு முன் வராவிட்டால், எங்கே சிலம்புச் செல்வர் சொன்னதைப் போல இந்தியா உடைந்து விடுமோ என்பதுதான்.

இந்தியாவின் ஒருமைப்பாடு என்கிற கேடயத்தைக் கையில் வைத்துக்கொண்டு, மாநில சுயாட்சி–மாநிலங்களுக்கு உரிமைகள் என்கிற குரலை அடக்கி ஒடுக்கிவிட மத்தியிலிருப்பவர்கள் எண்ணுமல், சாவதானமாகச் சிந்தித்து தி. மு. கழகம் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்ட கட்சி–பிரிவினைக் கொள்கையை எதிர்த்த கட்சியான தமிழரசுக் கழகத்துடன் உறவாடிக் கொண்டிருக்கிற கட்சி-நாங்கள் பிரிவினையை விட்டு விட்டோம் என்று அறிவித்த கட்சி என்ற நம்பிக்கையோடு எங்களுடைய வரலாறுகளை ஆராய்ந்து கொண்டிராமல் நான் சொல்லுகின்ற விஷயங்களை ஆராய்ந்து சிந்தித்து, நல்ல முடிவை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

# மாநில சுயாட்சி ம. பொ. சி. யின் படைப்பு!

## மேலவை உறுப்பினர்கள் பேச்சு!

சட்ட மேலவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீது 25-4-74 அன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. எம். எம். பக்கர் பேசியபோது தலைவர் ம. பொ. சி. பற்றிக் குறிப்பிட்ட பகுதி வருமாறு:

### திரு எம். எம் பக்கர்

"ம. பொ. சி. அவர்கள் காட்டிய வழியில் முதலமைச்சர் அவர்கள் செல்கிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு பேச்சு; இதிலே என்ன தவறு? தான் பிறந்த பொன்னாட்டுக்காக, அதன் சுதந்திரத்திற்காகத் தடியடி பட்டவர், சிறை சென்றவர், பல தியாகத் தழும்புகளை ஏற்றவர். அதுமட்டுமல்லாமல், நாடு சுதந்தரம் அடைந்தவுடனே, தமிழ்நாட்டின் எல்லையைக் காப்பதற்காகத் தன்னுடைய வாழ்க்கையில் பல தியாகங்களைச் செய்தவர்; தன்னுடைய நாட்டின் மொழியை பிறமொழி ஆதிக்கத்தில் இருந்து காப்பதற்காகவும் பல தியாகங்கள் செய்தவர்-இப்படி இந்தத் தமிழ் நாட்டின் மானத்தைக் காப்பதற்காக வரிந்து கட்டிக்கொண்டு பாடுபட்டு வருகிறவர் தமிழ்ப் பெருமகன் சிலம்புச் செல்வர் ஆவார்.

அவரிடம் யோசனை கேட்காமல், தலைவன் என்று வேஷம் போட்டுக் கொண்டு, தரங்கெட்ட முறையில் பேசி வருகின்றவர்களிடமா முதல்வர் யோசனை கேட்கவேண்டும்? இப்படிப் பேசுவது விவரம் தெரியாத பேச்சு ஆகும்.

## திரு. எம். சங்கரலிங்கம்

மேலவை தி. மு. க. உறுப்பினர் திரு. எம். சங்கரலிங்கம் அவர்கள் 25-4-74ல் மேலவையில் பேசுகையில் ம. பொ. சி. பற்றிக் குறிப்பிட்டது வருமாறு:

சுதந்தரம் பெறுவதற்கு முன்பு காங்கிரஸ் சமஷ்டி பற்றித்தான் சொல்லி வந்தது. இதைப்பற்றித் துணைத் தலைவர் (ம. பொ. சி.) அவர்கள் விளக்கமாகச் சொல்வார்கள். அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து, அந்த இயக்கத்தை வளர்த்து, விடுதலையையும் கொண்டு வந்து, இந்தச் சுயாட்சிக் கருத்தையும் முதிய தலைவர்களின் பேராதரவோடு சொல்லி வந்தார்கள். அவர்கள் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்லுவார்கள்.

நான்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தில் பின்னால் வந்து சேர்ந்தவன்தான். நான் நமது துணைத் தலைவர் (ம. பொ. சி.) அவர்களோடு தமிழரசுக் கழகத்திலும், அதற்கு முன்னால் காங்கிரசிலும் இருந்தவன். 1942-ல் சிறைச்சாலை சென்றவன். வைக்கம் போராட்டத்தில் என்னுடைய தந்தையார் பெரியார் ஈ. வே. ரா. அவர்களோடு சிறை சென்றார்கள். நானும் பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவன். 1946க்குப் பிறகும் கன்னியா குமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைகிற போராட்டத்தில் சிறை சென்றவன்.

நான் தெளிவாகச் சொல்லுவதாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை சொல்லுகிறபோது, அதை வன்மையாக நான் எதிர்த்தவன். 1962ல் அவர்கள் பிரிவினையை விட்டு விட்டு சீனப் போரில் இந்த நாட்டினுடைய எல்லாத் தேசிய சக்திகளுக்கும் மிஞ்சி நின்று தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றிய பிறகு என்னுடைய கருத்தையெல்லாம் அது ஏற்றுக் கொண்டது.

நம்முடைய துணைத் தலைவர் ம. பொ. சி. அவர்களைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பலமாக எதிர்த்தவர்கள் யாரும் இல்லை என்று சொல்லலாம். அவருக்கு தனிப்பட்ட வகையில் தி. மு. க. தலைவர்கள் மீது காழ்ப்பு இல்லை. பிரிவினைக் கொள்கையில் அவருக்கிருந்த கடுமையான எதிர்ப்பே அதற்குக் காரணம். இன்று பிரிவினைக் கொள்கை விடப்பட்டதென்றால், அது அரசியல் தந்திரம் அல்ல; உண்மையாக உணர்ந்துதான், நாட்டினுடைய ஐக்கியத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் அந்தக் கொள்கையைக் கைவிட்டதன் காரணமாகத்தான் திரு. ம. பொ. சி. அவர்கள் அந்த அணியில் நிற்கிறார். 'மாநில சுயாட்சி' என்பது, அவர் அர்ப்பணித்தது. அந்தக் கருத்துத் தேசிய முகாமில் பிறந்து, தேசியத்தில் வளர்ந்தது.

# சுயாட்சிப் போர்பற்றி சட்டப் பேரவையில் விவாதம்

**"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரி திரு. ம. பொ. சிவஞானம் அவர்களால் நடத்தப்பட இருக்கும் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை"**

என்னுந் தலைப்பில் ஒரு ஒத்திவைப்புத் திர்மானத்தின் மீது 19—8—69ல் சட்டப் பேரவையில் நடந்த விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சீமைச்சாமி அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில், 'மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டி நாளைமுதல் போராட்டம் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை விவாதிக்க சபையை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்' என்று கொடுத்திருக்கிறார்கள். இதே கருத்துப்பட, திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை இன்று எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இருக்குமா என்ற நிலையிலே வேண்டாமென்று கூறியிருக்கிறேன். இருப்பினும் அவர்களும் இந்தத் தீர்மானம் எப்படிப் பேரவையில் விவாதத்திற்கு வரக்கூடியது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி** : சார், மதிப்பிற்குரிய திரு. ம. பொ. சி. அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்பாகவே மாநில சுயாட்சிப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்திலேயும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இது சம்பந்தமாகக் கூறுகிறபோது, காலம் வரும்;

நாங்களும் கலந்துகொள்வோம் என்று கூறியிருக்கிறார்கள். திரு. ம. பொ. சி. அவர்கள் முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியபோது ஒரு நாளைக்கு அந்தப் போராட்டத்தை நடத்திவிட்டு அதற்கு மேலே என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிறதில், சென்னையிலே தொடர்ந்து போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பே அறிவித்ததை மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்களா? மாநில அரசாங்கம் இதைப்பற்றி ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்ப முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? தொடர்ந்து போராட்டம் நடத்தினால் அதனால் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளையொட்டி—நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகம் நடத்த இருக்கின்ற போராட்டம் குறித்து நானும் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இது மிக முக்கியமான அவசரமான விஷயமாகும். மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரம் இல்லாமல் இன்றைய தினம் எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைத்தான் கேட்கக் கூடிய நிலைமையில் இருக்கிறோம். மாநிலங்களுக்கு எந்த அளவுக்குப் போதுமான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும், மாநிலங்கள் சுயேச்சையாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள். டீட்டெய்ல்ஸுக்கு எல்லாம் போக வேண்டாம்.

திரு. ஆ. கு. சுப்பையா: மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை எல்லாக் கட்சிகளும் விரும்புகின்றன. இந்த முறையிலே நம்முடைய தமிழக அரசு இது சம்பந்தமாக தீர விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்பதுதான் என்னுடைய நோக்கம். ஆகவே, இன்றைக்கு இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் மாண்புமிகு ம. பொ. சி. அவர்கள் நாளையதினம் நடத்த இருக்கின்ற மாநில சுயாட்சிப் போராட்டம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சீமைச்சாமி அவர்களும், திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், இன்றையதினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மாநிலங்கள் மத்திய அரசிடம் இருந்து அதிக அதிகாரங்களைப் பெற்று சுயாட்சித் தன்மையோடு விளங்கிட வேண்டுமென்ற கொள்கையை மிகவும் அக்கறையோடும், தீவிரமாகவும் எடுத்துச் சொல்லி வருகிற கட்சியாகும். இந்தக் கட்சியினுடைய தலைவராகவும், முன்னாள் முதல்வராகவும் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை வலியுறுத்தி அவர்கள் மறைவதற்கு முன்னால்கூட ஒரு பெரும் கட்டுரையை எழுதி இருக்கிறார்கள் என்பதையும் நாடு அறியும். எல்லாக் கட்சி நண்பர்களும் நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதில் உள்ள அக்கறையின் காரணமாக முதலமைச்சர் என்ற முறையில் நான் டில்லிக்குச் சென்றிருந்த நேரத்திலும், வேறு பல அறிவிப்புகளிலும் 'மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டும், ஆனால் அப்படிப் பெற வேண்டுமென்று கருதுகிற அதிகாரங்கள் எவை எவை என்று நாம் கூறும்போது, மொத்தத்தில் மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் போக மிச்சம் உள்ள எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கு என்று கூறுவதைவிட, திட்டவட்டமாக வரையறுத்து இன்ன இன்ன அதிகாரங்கள் என்று நாமே நமக்குள்ளே வரையறுத்துத் தெளிவுபடுத்திக்கொள்ள

வேண்டுமென்பதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது' என்று நான் அறிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட குழுவில் இந்தக் கொள்கைகளை ஒத்துக்கொள்ளுகின்ற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் தான் இருக்க வேண்டுமென்று இல்லை. இந்தக் கட்சியினுடைய கொள்கைகளைப் புரிந்துகொண்டு நம்முடைய கொள்கைகளுக்கேற்ப என்னென்ன அதிகாரங்களை மாநிலங்கள் மத்திய அரசிலிருந்து பெறலாம் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற சட்ட நுணுக்க அறிவும் வேறு பல ஆற்றல்களும் அமைந்த தகைமை சான்றவர்கள் அந்தக் குழுவில் இருக்க வேண்டுமென்று கருதி, அப்படிப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மூவர் கொண்ட குழுவாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பணியாகக் கூட்டாட்சித் தத்துவம் முழுமையும் அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும்; மத்திய அரசு அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்; மாநில அரசு அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டு மாநிலங்கள் பூரண தன்னாட்சி உரிமை பெற்று விளங்கத் தேவையான திருத்தங்களை அரசியல் அமைப்புச் சட்டத்திலே செய்வதற்கு அவர்கள் நமக்கு யோசனை கூற வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்குத் திரு. பி. வி. ராஜமன்னார் அவர்கள் தலைவராகவும், திரு. ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்களும், திரு பி. சந்திரா ரெட்டி அவர்களும் உறுப்பினர்களாகவும் இருந்து நல்ல முறையில் பணியாற்றி மாநிலங்கள் எந்தெந்த அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து பெறலாம் என்பதற்கான திட்டவட்டமான விளக்கங்களைத் தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த அதிகாரங்களைப் பெறலாம் என்பதற்கான குறிப்புகள் கொடுங்கள், அறிக்கை கொடுங்கள்' என்று அந்தக் குழுவினிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மூவரும் அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்துழைப்புத் தர ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு என்னென்ன அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதிலே திட்டவட்டமான முடிவுக்கு வந்து எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கூடி முடிவு செய்யலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்களும், மாண்புமிகு சுப்பையா அவர்களும் எடுத்துக் காட்டியதுபோல் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. வேறு மாநிலங்களிலே உள்ள காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் மாத்திரமல்ல; காங்கிரஸ் மாநில முதலமைச்சர்கள்கூட இப்படிப்பட்ட அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களில் இருந்து நல்லாதரவு கிடைக்கும்.

ஆகவே, இந்த அதிகாரங்களை வரையறுத்துக்கொண்டு நல்ல முறையில் பிரசாரம் செய்து, மற்ற மாநிலங்களுடைய நல்லாதரவையும் பெற்று மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டும். வாதாடிப் பயன் இல்லை என்றால் போராட வேண்டும். அப்படிப் போராடுகின்ற நேரத்தில் எல்லாக் கட்சிகளும் இணைந்து நின்று அந்தப் போராட்டத்தை நடத்திட வேண்டுமென்றுதான் தமிழரசுக் கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அவர்களும் முதலில் தொடர்ந்து இந்தப் போராட்டத்தை நடத்துவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் என்னுடைய வேண்டுகோளுக்குப் பிறகு அதை ஒரு நாள் அடையாளப் போராட்டமாக மட்டும் நடத்துவதற்கு முன்வந்தார்கள். ஆனால், இன்று காலை பத்திரிகைகளில் தொடர்ந்து சென்னையில் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. நான் அதைப்பற்றி ம. பொ. சி. அவர்களிடம் கேட்ட நேரத்தில், பத்திரிகைகளில் செய்தி தவறாக வந்திருப்பதாகவும், ஒருநாள் அடையாளமாக மட்டுந்தான் அந்தப்

போராட்டம் நடைபெறுவதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போதுகூட நான் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்—நான் அன்று கேட்டுக்கொண்டதைப் போல்—இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று.

மூவர் குழு முடிவுக்குப் பிறகு அனைவரும் இணைந்து, நம்முடைய மாநிலம் மாத்திரமல்லாது எல்லா மாநிலங்களும் இணைந்து நின்று வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற தகுந்த யோசனைகளைச் செய்து அதிலே ஈடுபடலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே! இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றியும் முதல்வரவர்கள் வெளியிட்ட அறிக்கை பற்றியும் விளக்கமாக இரண்டொன்று சொல்ல நிற்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அரசின் கவனத்தைக் கவர்ந்த அன்பர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் "ஒரு குழு அமைத்து, அந்தக் குழு அறிக்கை வெளியான பிறகு மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்கள் ஏற்கவில்லை என்றால் தொடர்ந்து போராடலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை ஓரளவுதான் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

இதிலே ஒரு அடிப்படைக் குறைபாடு இருப்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னென்ன அதிகாரங்களைக் கோருவது என்று நிபுணர்கள் முடிவு செய்வது எப்போது என்றால், கொள்கை ரீதியில் சுயாட்சிக்

கோரிக்கையை மத்திய அரசு ஒப்புக்கொண்டால்தான். முதலமைச்சர் அவர்கள் நிலைக்கு வசதியாக இருக்க வேண்டு மென்பதற்காக 'சுயாட்சிக் கோரிக்கையை கொள்கையளவில் ஒப்புக்கொண்டால் போதும்' என்று பிரதமருக்கு எழுதி னேன். இன்னும் பதில் வரவில்லை. மத்திய அரசும், அதை ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியும், இந்த மாநில சுயாட்சிக் கிளர்ச்சியைப்பற்றிக் கூறும்போது, "பிரிவினைக் கிளர்ச்சிக்கு இது முன்னோடி, அடையாளம்" என்ற முறையிலே கூறி, அடிப்படையிலே நமது தேசபக்தியையே சந்தேகிக்கின்றார்கள், அப்படி, பிரிவினைக் கொள்கைக்கு முன்னோடி என்று சொல் லும் ஆட்சியிடம் நிபுணர் குழுவின் அறிக்கையை அனுப்பு வதால் என்ன பயன்?

இதைப்பற்றி நிபுணர் குழுவினருக்கும் தெளிவு இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் மொழிவாரி இனங் களின் பிறப்புரிமை என்ற வகையில்தான் சுயாட்சித் தன் மையை வலியுறுத்தி வருகிறேன். இந்தக் குழுவில் இருப் பவர்கள் மொழிவாரி மாநில அமைப்பை எதிர்த்து அறிக்கை விட்டவர்கள், கண்டித்தும் அறிக்கை விட்டவர்கள். அவர் களுக்கு மொழிவாரி மாநிலங்களின் சுயாட்சிக் கொள்கை யிலே எப்படி நம்பிக்கை இருக்க முடியும்? தனிப்பட்ட முறை யிலே அவர்களிடம் எனக்கு மதிப்பு உண்டு. அவர்களை நான் மதிக்கக் கூடியவன்.

சென்னை நகரில் ஆகஸ்டு 20-க்குப் பின்னும் தொடர்ந்து போராட்டம் நடைபெறுமென்று இன்று காலையில் வந்த செய்தி சரியல்ல. ஒருநாள் அடையாள நிகழ்ச்சியாகத்தான் போராட்டத்தை நடத்துகிறேன். தொடர்ந்து நடத்துவதை முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, பொறுப்பை அவரிடம் தந்து, நிறுத்திக்கொள்கிறேன் என் பதை முதல்வர் அவர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே! அமைக்கப்பட்ட குழுவைப்பற்றி நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் சில எண்ணங்களை வெளியிட்டார்கள். நம்முடைய மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்காக அமைக்கப்பட்ட குழுவை நாமே சந்தேகிப்பது நல்லதல்ல. அந்தக் குழுவிலே இருப்பவரும், இன்று மேலவை உறுப்பினராக இருக்கக்கூடியவருமான மதிப்பிற்குரிய டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் மேலவையிலே ஆற்றியிருக்கும் உரைகளைப் பார்த்தாலே, மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதை எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிறார் என்பது தெளிவாகத் தெரியும். நாமே குழுவைச் சந்தேகிப்பது முறையல்ல. அந்தக் குழுவினிடம் பொறுப்பை ஒப்படைத்து அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்ததும் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் எல்லாக் கட்சியினரோடும் சேர்ந்து மத்திய அரசிடம் இருந்து பெற வேண்டிய உரிமைகளுக்காக, பெற வேண்டிய அதிகாரங்களுக்காக வாதாடும். வாதாடிப் பயன் இல்லையென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் போராட்டத்திற்கு அஞ்சியது அல்ல என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்தையொட்டி இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

(தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் : 19—8—1969. பக்கங்கள் 254—259.)

# மாநில சுயாட்சித் தீர்மானம்

## 1

21—8—70 அன்று தமிழக சட்டப் பேரவையில் மாநிலங் களுக்குச் சுயாட்சி வழங்கக் கோரும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தை தமிழரசுக் கழகத்தின் சார்பில் திரு. ம. பொ. சிவஞானம் முன் மொழிந்தார். அப்போது அவர் பேசியது வருமாறு:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த அவையில் முன் மொழிகிறேன்:

> "மாநிலங்கள் சுயாட்சி அந்தஸ்தை உடையவை யாக இருக்கும் வகையில் அவற்றிற்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கவும், மத்தியில் மேலும் மேலும் அதிகாரங்கள் குவிந்துகொண்டிருப்பதைத் தவிர்க்க வும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆவன செய்யுமாறு மத்திய அரசினை வற்புறுத்தும்படி தமிழ்நாடு அரசுக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது."

இப்பொழுது நம் நாட்டிலுள்ள அரசியல் சட்டத்தை நாம் பொதுவாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த அர சியல் சட்டத்திற்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துத்தான் நான் இங்கே அங்கம் வகிக்கிறேன். ஆனாலும், அந்த அர சியல் சட்டத்திலேயே ஒரு விதி இருக்கிறது. அதன்படி கால மாறுதலுக்கேற்ப அரசியல் சட்டத்தை மாற்றுமாறு கோர லாம், மாற்றவும் செய்யலாம். அந்த விதியின்படித்தான்

இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் முன்பு கொண்டு வருகிறேன்.

நம் நாட்டிலுள்ள அரசியல் சட்டம் ரொம்ப விசித்திர மானது. அது, மூன்று அதிகாரப் பட்டியல்களைக் கொண் டிருக்கிறது. ஒரு பட்டியல், 'சென்ட்ரல் லிஸ்ட்' — மத்திய அரசினுடையது. அந்தப் பட்டியலிலுள்ள எந்த அதிகாரத் தையும் மாநில அரசு கோரிப் பெற முடியாது.

இரண்டாவதாக, மாநிலத்திற்கென்று ஒரு பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் பொது வாக மாநிலத்திற்கே உரியவை என்றாலும், மத்திய அரசு விரும்பினால், இராஜ்ய சபை மூலம் அந்த அதிகாரங்களில் எதையும் பறித்துக் கொள்ளலாம்.

இராஜ்ய மந்திரி சபை மீது மத்திய அரசுக்கு அவ நம்பிக்கை ஏற்படுமானால், ''சட்டம் ஸ்தம்பித்து விட்டது'' என்று சொல்லி—அனைத்து அதிகாரங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த – ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரலாம்.

மூன்றாவதாக, மத்திய அரசுக்கும் மாநிலத்திற்குமான பொதுப் பட்டியல் ஒன்று இருக்கிறது. 'கன்கரன்ட் லிஸ்ட்' என்று. ஆனால், அந்தப் பட்டியல் மீது சுப்ரீம் பவர் மத்திய அரசுக்கே யொழிய, மாநில அரசுக்கு இல்லை என்று அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. பொதுவாகப் பார்த்தால் அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசுக்குத்தான். அது நல் லெண்ணம் காட்டி விட்டுக் கொடுப்பதை, விட்டுக் கொடுக் கின்ற காலம்வரை, மாநில அரசு வைத்துக் கொள்ளலாம். இப்படி ஒரு அரசியல் சட்டம் சமஷ்டி நாடு எதிலும் இல்லை. இதனை, சமஷ்டி நாடுகளின் அரசியலமைப்புகளை ஆராய்ந்து பார்த்தே சொல்லுகிறேன்.

கதை ஒன்று சொல்கிறேன்; தென்னைமரம் ஏறத் தெரி யாத ஒருவன், மரம் ஏறத் தெரிந்தவனைக் கூப்பிட்டு, தன்

மரத்தில் ஏறித் தேங்காய் பறிக்கச் சொன்னுன். 'மரம் ஏறிய உனக்கு 1, மரத்தின் சொந்தக்காரனுன எனக்கு 3-ஆக 4 காய்கள் பறி' என்று சொன்னுனும். மரம் ஏறியவன் தேங் காயைப் பறித்துக் கொண்டு கீழே இறங்கி, "ஏறியதற்கு ஒன்று. இறங்கியதற்கு ஒன்று. நீயாகக் கொடுக்கிறேன் என்று சொன்னது ஒன்று. நாஞக எடுத்துக் கொண்டது ஒன்று" என்று சொல்லி, நான்கையும் எடுத்துக் கொண்டு போய்விட்டாஞம்.

அதைப்போல், மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் அதற்கே! மாநில அரசுக்குக் கொடுத்ததையும் விரும்பினுல் எடுத்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. இரண்டுபேருக்கும் பொதுவான அதிகாரங்களிலே முடிவான அதிகாரம் மத்திய அரசுக்கே!

இந்த அரசியல் அமைப்பு முறை சமஷ்டி முறைக்கே மாறுபட்டதாக இருப்பதைப் பார்க்கிறேம். வேறு எந்த நாட்டிலும் கன்கரண்ட் லிஸ்டிலே இவ்வளவு அதிகாரங் களைக் குவித்துவைத்து—அவர்களுக்குத்தான், சமஷ்டிக்குத் தான் முடிவான அதிகாரம் என்று வைக்கவில்லை.

அரசியல் சட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். நடைமுறை யில் பார்த்தால், திட்டக் கமிஷன் ஒன்று இருக்கிறது. இராஜ்யங்களுக்கு உள்ள அதிகாரங்கள் எல்லாவற்றிலும் தலை யிடக் கூடிய ஒரு போட்டி அரசாங்கமாகவே அது இருக் கிறது. பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இந்தத் திட்டக் கமிஷனைப் பற்றி, "நான் எதிர்பார்க்காத அளவுக்கு இது போட்டி அரசாங்கத்தைப் போல் வளர்ந்து தொலைந்து விட்டது" என்று மிக வருத்தத்தோடு சொல்லிவிட்டார். திட்டக் கமிஷன், கல்வித் துறையிலே தலையிடலாம். விவ சாயத்திலே தலையிடலாம். அது இடுகின்ற ஆணைகளை மாநில அரசானது ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை இருக்கிறது.

கல்வித்துறை மாநிலங்களுக்கே உரியது என்று சொல்லப் பட்டாலும் பல்கலைக்கழக மானியக் குழு என்று ஒன்று இருக் கிறது. கொஞ்சம் பணத்தைக் காட்டி, மாநிலங்களிடத்தி லிருந்து கல்வி நிலையங்களிலும் அது தலையிடலாம்.

தொழில் அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் "தினத்தந்தி"யிலே கல்வித்துறையைப் பற்றி—சில திங்கள் அந்தத் துறையை நிர்வகித்த அனுபவத்தைப்பற்றி— எழுதினுர்கள். எப்படி எல்லாம் சுற்றி வளைத்து, இராஜ்யத் தில் கல்வித் துறையிலே பல்கலைக் கழக மானியக் குழு தலையிட முயல்கிறது என்பதை எடுத்துச் சொன்னபோது, "மிகுந்த வேதனையோடு" என்ற வார்த்தையை நிறையக் கையாண் டிருந்தார்கள். சொற்ப நாட்களே அந்தத் துறையிலே அனு பவம் பெற்ற அவர்கள், எவ்வளவு வேதனையை அனுபவித்து இருக்கிருர்கள்! இந்த இலட்சணத்தில் கல்வித்துறை மாநிலத் திற்கே உரியது என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

இங்கு இந்தி போதனை வேண்டாமென்று நாம் முடிவு செய்திருக்கிறேம். ஆனுல், பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம் இங்கு இந்தியைக் கொண்டு வருகிறது மத்திய அரசு. ஏன், இந்தி பல்கலைக் கழகத்தைக் கூடத் துவக்க முன் வரு கிறது. ஆக, ஜனநாயகத்தைப் பறிக்கக் கூடிய அளவுக்கு பல்கலைக் கழக நிதிக் குழுவும் திட்டக் கமிஷனும் செயல் படுவதைப் பார்க்கிறேம்.

மொத்தத்தில் நடைமுறையில் அரசியல் சட்டம் கொடுக்கிற சொற்ப அதிகாரங்களைக்கூட மாநிலங்கள் அனு பவிக்க முடியாமல் பல்கலைக் கழக மானியக் குழுவும் திட்டக் கமிஷனும் இயங்குகின்றன.

இன்னெரு கட்டுப்பாடு அரசியல் சட்டம் கொடுக்கும் அதிகாரத்தைத் தணிக்கை செய்கிறது. அது கட்சிக் கட்டுப் பாடு. இந்த மாநிலத்திலேயே பார்க்கும்போது, மத்தியி லுள்ள ஆளுங்கட்சிதான் இங்கும் ஆளும் கட்சி என்ருல்,

மத்தியிலே உள்ள கட்சியினுடைய மேலிடம் இங்குள்ள ஆளு வோரைக் கூப்பிட்டு "இதை இப்பொழுது அமுல் படுத்தாதே; அதை இப்பொழுது விரும்பாதே" என்று ஆணையிடுகிறது. அரசியல் சட்டம் அனுமதி கொடுத்தாலும்—மாநிலத்திற்கு உரிமை அளித்தாலும்-கட்சிக் கட்டுப்பாடு, மேலிடத்தின் உத்திரவு அந்த உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தடையாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, அது மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் இன்னின்ன என்பதைத் தெளிவு படுத்தும் பிரச்னையை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்று இந்தத் தீர்மானத்தின் மூலம் கூற விரும்புகிறேன்.

அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து 19-ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 19-ஆண்டு அனுபவத்தை வைத்துப் பார்த்தாலும் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமான அதிகாரப் பங்கீடு பற்றிய சட்ட விதிகளை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டுமென்பதை எந்தக் கட்சியும்—என்னோடு வேறுபாடு உள்ள கட்சி கூட-ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தெரிகிறது.

எல்லா மாநிலங்களிலும் 20 ஆண்டுகள் ஒரே கட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது இந்தக் குறைபாடுகள் வெளியில் தெரியவில்லை; தெரியாமல் மறைக்கப்பட்டு வந்தன. ஆனால், அநேக மாநிலங்களில் வெவ்வேறு கட்சிகள் ஆள வந்துவிட்டன. அவைகளால் அரசியல் சட்டத்தில் உள்ள குறைபாடுகள், கோணல்கள் வெளிப்படுத்தப்பட்ட காரணத்தால், அரசியல் சட்டத்தையே மாற்றவேண்டிய—அரசியல் அமைப்புப் பற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். கேரளத்தின் முதல் அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார்; அவர், "அரசியல் சட்டத்தை உடைக்கிறேன்" என்றாரோ, அல்லது "அரசியல் சட்டத்தைத் திருத்துகிறேன்" என்றாரோ.

பத்திரிகைச் செய்தியே விவாதத்திற்குரியதாகி விட்டது. அவர், "திருத்தந்தான் கோருகிறேன்" என்று சொல்கிறார். ஆனால், மத்தியினுடைய உள்துறை அமைச்சர். "வா" என்று அவரை டில்லிக்கு கூப்பிட்டிருக்கின்றார்.

போலீஸ் ஸ்டேஷனுக்குக் குற்றவாளியைக் கூப்பிடுகிற மாதிரி "டெல்லிக்கு வா" என அழைத்திருக்கிறார். அப்படிக் கூப்பிடுகிற முறையிலே டெல்லி உள்துறை அமைச்சகத்திற்கு அதிகாரம் இருக்கிறது: அரசியல் மரபை மீறுகிற அரசாக அது இருக்கிறது.

தி. மு. கழகம் மக்களிடத்திலே மிகுந்த செல்வாக்கு கொண்டுள்ளது. அதனை, அதற்கு ஏற்பட்ட பல சோதனைகளிலே கூட, அது உறுதிப்படுத்தி வந்திருக்கிறது. அத்தனை உபதேர்தல்களிலும் வெற்றி கண்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இத்தனைத் துணைத் தேர்தல்கள் அந்த மாநிலத்தைச் சோதிக்கவில்லை. இடைத் தேர்தல்கள் மேலும் மேலும் வருகின்றன.

இவ்வளவு செல்வாக்கை அது மக்களிடம் பெறக் காரணம், ஏற்கனவே காங்கிரஸ் கட்சி ஆட்சியின் பொழுது இருந்த நிலையை மாற்ற முயல்வதுதான். மத்தியிலுள்ள ஆட்சிக்கு மாநில ஆட்சி அடங்கிச் சென்ற காலம் போய் விட்டது. மாநில மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கத் தக்க வகையில், இந்த மாநிலத்தின் தனித் தன்மைக்கு—மாநிலத்தின் தனிப் பழக்க வழக்கத்திற்கு—மாநிலத்தின் தனிப் பாரம்பரியத்திற்கு-மாநிலத்திற்குத் தனி வரலாறு உள்ளது என்பதற்கு மதிப்பு கொடுக்க மத்திய அரசு தவறுகிறது. இதனால் வெறுப்பு அடைந்து, அதிருப்தி அடைந்து, காங்கிரசுக்கு எதிரான மனப்போக்கை மக்கள் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, தி. மு. கழகம் தாங்கள் நினைத்ததைச் செய்யும்; காங்கிரஸ் அல்லாத கட்சிகள் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றும்; தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் எல்லாம் தங்களுக்குக் கிடைக்கும் என்று ஆசைப்

பட்ட மக்கள் ஒன்றைத் தெரிந்து கொண்டார்கள். இப்போது காங்கிரசு அல்லாத கட்சிகளை அரசாட்சியில் அமர்த்திப் பார்த்த பிறகு ஒரு காங்கிரஸ் அல்லாத கட்சி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு ஒன்றை நிறைவேற்ற நினைத்தால், அப்படி நிறைவேற்றப்பட அரசியல் சட்டம் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை அறிந்துகொண்டார்கள்.

என்னுடைய சொந்த அபிப்பிராயம் ஒன்றை நான் சொல்கிறேன். ஏன், நான் சார்ந்திருக்கிற தமிழரசுக் கழகத்தின் சார்பாகவும் சொல்கிறேன். மத்தியில் போக்குவரத்து, அயல்நாட்டு உறவு, பாதுகாப்பு ஆகிய மூன்று அதிகாரங்களை மட்டும் வைத்து, மற்றவைகளையெல்லாம் மாநிலங்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது என் கொள்கை. ஆனால், நான் கொடுத்துள்ள தீர்மானத்தில் அப்படி வரையறுத்துச் சொல்லவில்லை. அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியம் இருக்கிறது; அதிகாரப் பங்கீட்டுப் பட்டியலை மாற்றி அமைக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது என்ற அளவுக்கு பொதுப்படையாக இந்த மன்றம் ஒப்புக்கொண்டு, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி தமிழக ஆட்சியினுடைய கரத்தைப் பலப்படுத்தி, மத்தியத்திற்கு அனுப்பினால் போதும். விவரங்களைப் பிறகு—நடைமுறைக்கு வரும்போது பார்த்துக் கொள்ள விட்டுவிடலாம் என்ற எண்ணத்தால்தான் இந்தத் தீர்மானத்தில் விவரங்களைச் சொல்லாமல் விட்டுவிட்டேன்.

முடிப்பதற்கு முன்பு ஒன்று சொல்கிறேன். நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து, அனுபவித்து, நான் தெரிந்து கொண்டதைச் சொல்லுகிறேன். காங்கிரஸில் 28 ஆண்டு காலம் இருந்து, விடுதலைப் போராட்டத்தில் இரண்டறக் கலந்துகொண்டு, எந்தெந்தக் காலத்தில், காங்கிரசிலே எப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, எந்தத் தீர்மானம்—எந்த உணர்ச்சியின் பின் அணியிலே நிறைவேற்றப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியும்.

திரிபுரா காங்கிரசிலும் அரிபுரா காங்கிரசிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பாதுகாப்பு—போக்குவரத்து—அயல்நாட்டு உறவு இந்த மூன்று அதிகாரங்களையும் மத்தியத்திற்கு விட்டுவிட்டு, மற்றவையெல்லாம் உடைய மாநில அரசுகள் சுதந்திர இந்தியாவில் அமையும் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறது.

அந்தக் காங்கிரஸ் மகாநாடுகளில் தலைமை வகித்த நேதாஜி சுபாஷ்போஸ் அவர்கள் தலைமை உரையிலும் அவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல. தனது தேர்தல் பிரகடனங்களில் மாகாண சுயாட்சிக் கொள்கையை காங்கிரஸ் வற்புறுத்தியிருக்கிறது.

இன்னும் பின்னே சென்றால், 1935வது ஆண்டு சட்டத்தை காங்கிரஸ் நிராகரித்ததற்கான காரணம் மாநிலங்களுக்குப் போதிய சுயாட்சி வழங்கப்படவில்லை என்பதுதான். 1946வது வருஷத்தில் வெளியான பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தில்—இந்தியாவுக்கு சுதந்தரம் கொடுத்தபொழுது—இந்த மூன்று அதிகாரங்கள் மத்தியத்திற்கும், மற்றவைகளெல்லாம் மாநிலங்களுக்கும் என்று சொல்லப்பட்டது. இந்த மூன்று அதிகாரங்களிலிருந்து கிடைக்கின்ற நிதி வசதி மத்திய அரசுக்குப் போதுமா?—என்ற வினா எழுந்த நேரத்தில், அதிலே ஒரு விதியைப் புகுத்தியிருக்கிறார்கள். அது, மத்திய அரசுக்கு வருவாய் போதாது என்றால், மாநிலங்களிடமிருந்து மானியம் பெறலாம் என்பதாகும்.

இதையெல்லாம் முணு முணுப்பு இல்லாமல் ஏற்றுக்கொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய சுதந்திரத்தை ஆகஸ்டு 15ம் தேதி பிரகடனம் செய்தது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் அரசியல் நிர்ணய மன்றம் அமைக்கப்பட்டது.

இந்த அரசியல் நிர்ணய மன்றத்தில் முதல்நாள் கூட்டத்தில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில், "மூன்று அதிகாரங்களை மத்தியத்திற்கு

வழங்கி, மற்றைய அதிகாரங்களையெல்லாம் உடைய சுயாட்சி மாநிலங்களைக் கொண்ட சுதந்திர இந்தியா உலகத்திற்கு ஒரு முன்னோடி. இந்த உலகத்திற்கு ஒரு வழிகாட்டி என்று நான் பெருமைப்படுகிறேன்'' என்று பேசினார். ஆனால், பிற்கால நடைமுறையில் என்னென்னவோ நிகழ்ந்து, எல்லாம் தலைகுப்புற கவிழ்ந்துவிட்டதைப் பார்க்கிறோம்.

அரசியல் நுணுக்கங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நிர்வாக அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகினால் – இங்கு ஒரு கல்வித்துறை. டில்லியில் ஒரு கல்வித்துறை. போலீஸ், சுகாதாரத் துறைகள் இங்கும் இருக்கின்றன; அங்கும் இருக்கின்றன. முழு அளவுக்குப் பொறுப்பேற்று நடத்துகிற மாநில சர்க்காரிடத்தில் ஒரு பொதுச் சுகாதாரத் துறை இருக்கிறது. மத்தியிலும் ஒரு பொது சுகாதாரத் துறை இருக்கிறது. இங்கு ஒரு போலீஸ் துறை; இந்த போலீஸ் அமைச்சரை நம்பாமல், அங்கு ஒரு போலீஸ் துறை எதற்கு? நம்முடைய மதிப்பிற்குரிய சவாண் அவர்கள் மகாராஷ்டிர முதலமைச்சராக இருந்தபோது அவரை சந்தேகித்தது மத்திய போலீஸ் துறை. அவரே மத்திய உள்துறை அமைச்சரானபின், மாகாண உள்துறை அமைச்சரை சந்தேகிக்கிறார். மாநிலத்தில் உள்துறை அமைச்சராக இருப்பவரிடம் மத்திய உள்துறைக்கு ஐயப்பாடு இருப்பதால், அங்கே மத்தியில் ஒரு போலீஸ்துறை அவசியமாகிறது.

மாநிலத்தில் ஆளுநராக உள்ளவர் அந்த மாநிலத்தைச் சேராதவராக இருக்கவேண்டும் என்ற மரபு உள்ளது. அரசியல் சட்டம் அப்படிச் சொல்லவில்லை. அரசியல் சட்டப்படித் தமிழகத்து ஆளுநர் தமிழராக இருக்கக்கூடாது என்பது இல்லை. வங்காளத்தில் ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. கேரளத்தில் ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. சுதந்தரம் பெற்று 23 ஆண்டுகள் சென்றும், தமிழ் நாட்டில் தமிழ் மகன் ஒருவர் ஆளுநராக வரவில்லை. ஏதோ ஒரு ஐயப்பாட்டின் அடிப்படையில் இப்படிப்பட்ட ஒரு மரபு

இருக்கிறதே தவிர, அரசியல் சட்டம் அப்படி வற்புறுத்தவே இல்லை.

வலிமை வாய்ந்த மத்திய சர்க்கார் வேண்டும் என்று சொல்கிற தேச பக்தர்களோடு நான் இரண்டறக் கலந்து கொள்கிறேன். இந்திய ஒருமைப்பாடு காக்கப்படவேண்டும் என்பவர்களோடு உணர்ச்சி பூர்வமாக நான் ஒன்றுபடு கிறேன். ஆனால், வலிமை உள்ள சர்க்கார் வேண்டும் என்பதற் காக, சுகாதாரத்தையும், கல்வியையும் ஏன் மத்தியிலும் வைத்துக்கொள்ள வேண்டும்? யாருக்கு எதிராக மத்தியில் வலிமை வாய்ந்த சர்க்கார்? மாநிலத்திற்கு எதிராக மத்தி யத்தில் வலிமை வாய்ந்த சர்க்கார் இருக்கவேண்டும் என்று சொல்வது, மக்களுடைய தேசபக்தியையே சந்தேகிப்பது ஆகும்.

மத்திய சர்க்கார் மாநில சர்க்கார் மீது சந்தேகத்தை 20 ஆண்டுகளாக வளர்த்து வந்ததன் விளைவுதான் ஜனாதிபதி தேர்தலின் முடிவு. அந்த முடிவு நம் மிடையே நல்ல மாறுதலை ஏற்படுத்தவேண்டும். வெற்றி வெறியோடு நான் சொல்லவில்லை. விரோத உணர்ச்சியோடு நான் சொல்லவில்லை. நேற்றிரவு 10-30 மணிக்கு அறிவிக்கப் பட்ட முடிவு வோட்டுகள் எப்படிப் பிரிந்துள்ளன; மாகாணங் கள் எப்படி காங்கிரசின் கையை விட்டுப் போய்க் கொண்டி ருக்கின்றன என்பதை உணர்த்துகிறது. வெற்றி, நான் விரும்பு கிற பக்கம் இருந்தாலும் கூட, எனக்குக் கவலை இருக்கிறது. அது பகைமையில் போகக்கூடாது, உறவில் முடியவேண்டும். அந்த உறவை வளர்க்க அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். இதைத் தவிர, வேறுவழி ஒன்றும் தெரியவில்லை.

இது ஒருமைப்பாட்டு முயற்சிக்குக் கேடானது என்றால் அதை எனக்கு எடுத்துச் சொல்லலாம். இதில் என்ன கேடு வந்துவிடும்? சுகாதாரத்தை, கல்வியை மாநிலங்களுக்கே விடுவதனால் இந்தியாவில் பலம் வாய்ந்த சர்க்கார் மத்தியில் இருக்காதா?

நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் ஒன்றை திரு. ஹனுமந்தய்யா தலைமையில் மத்திய சர்க்கார் நியமித்தது. அந்தக் கமிஷனும் சிபார்சு செய்திருக்கிறது, 'அதிகாரப் பங்கீட்டு முறைகள் மாறவேண்டும்' என்று. நிதி வசதி கூடுதலாகக் கிடைக்கும் அளவுக்கு மாநிலங்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும். திட்டங்களை நிறைவேற்ற மாநிலங்களுக்கு சுதந்திரம் தரவேண்டும்! மாநிலக் கவுன்சில் ஒன்று வேண்டும் என்றெல்லாம் நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது. காங்கிரசின் கையிலுள்ள மத்திய அரசு நியமித்த நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷனே இப்படிச் சிபார்சு செய்துள்ளது. காங்கிரஸ் தலைவர்கள்கூட மறுக்க மாட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒருவேளை என்னைப் பிடிக்கவில்லை என்றால், நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளின் பேரிலாவது இந்தத் தீர்மானத்தை அவர் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானத்தின் மீது நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. விவாதத்தின் முடிவில் ஏதேனும் சொல்ல வேண்டுமானால் சொல்கிறேன்.

## 2

[திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் 21-8-70 அன்று முன்மொழிந்த மாநில சுயாட்சிக் கோரிக்கைபற்றிய தனிநபர் தீர்மானம் 3-9-70 அன்று திரும்பவும் விவாதித்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழக அரசின் நிலைமையை விளக்கிப் பேசியது]

மாநில சுயாட்சிபற்றி இத்தீர்மானத்தின் மீது பேசும்போது நான் தமிழரசுக் கழகத்தலைவர் அவர்களைப் பொதுவாக இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்ளப் போகிறேன்.

வலியுறுத்த வேண்டாம் என்பதற்குக் காரணம் அந்தத் தீர்மானத்தில் பொருந்தியிருக்கிற கருத்துக்கள் எனக்கு ஏற்புடையதல்ல என்பதால் அல்ல. அந்தக் கருத்துகளை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

மாநில சுயாட்சி என்று அவர் குறிப்பிட்டிருப்பதும், மத்தியில் மேலும் மேலும் அதிகாரங்கள் குவிவதைத் தடுக்க வேண்டுமென்று அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதும், அதிகாரங்கள் பரவலாக ஆக்கப்படவேண்டும் என்றும் மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக் காட்டியிருப்பதும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களாகும்.

கழகத்தின் சார்பில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி அதைவலியுறுத்தி வருகின்ற காரணத்தாலே எந்தெந்த திட்ட வட்டமான அதிகாரங்களை நாம் பெறமுடியும்—அவற்றைப் பெறுதற்கான வாய்ப்புக் கூறுகள் என்ன இருக்கின்றன. எந்தெந்த அதிகாரங்களைப் பெறுவதற்கு இன்றுள்ள அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்காக அரசின் சார்பில் 3 மேதைகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் குழுவின் அறிக்கை வந்த பிறகு எந்த அடிப்படையில் ஆராய்ந்து அரசாங்கத்தின் சார்பிலே ஒரு தீர்மானத்தை—மாநில சுயாட்சி பெறவேண்டும் என்கிற தீர்மானத்தை தாக்கல் செய்ய இருக்கிருேம். என்னென்ன அதிகாரத்தை நாம் பெறவேண்டும் என்ற அளவிலே அந்தத் தீர்மானத்தைத் தயாரித்து இந்த மன்றத்திலே தரப்போகின்ருேம். அந்தத் தீர்மானத்திற்கு அவர் வடிவம் கொடுக்க வேண்டுமென்ற அளவிலே இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைத் தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் வலியுறுத்த வேண்டாம்.

# ம. பொ. சி. பதில்

## 3

முதல்வர் பேசியதையடுத்து தமது தீர்மானம் பற்றிய விவாதத்தை முடித்து வைத்து ம. பொ. சி. பேசியது வருமாறு :

பேரவைத் தலைவரவர்களே! நான் முன்மொழிந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை பலர் ஆதரித்துப் பேசினர்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"மாநிலங்களுக்கு ஓரளவிற்கு மேலான அதிகாரங்கள் தேவைதான்" என்று சொல்லிக் கொண்டு தீர்மானத்தை எதிர்க்கும் பாணியில் பேசினர் எதிர்க்கட்சித் தலைவர். "தீர்மானம் முழுமை பெறவில்லை. என்னென்ன கேட்கிறீர்கள்?" என்று கூறினர்கள். அது நான் காட்டிய கண்ணியம் என்று சொல்லுகின்றேன். இந்தப் பேரவையைக் கட்டுப்படுத்தி விடக்கூடிய நிலையில் தீர்மானத்தை நான் அமைக்கவில்லை.

சுயாட்சி அடிப்படையில் கூடுதலாக என்னென்ன அதிகாரங்கள் தேவை என்பதனை எதிர்க்கட்சித் தலைவரவர்களே கூட, திருத்தத் தீர்மானமாகக் கொடுத்திருக்கலாம்.

பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை என்று அவர்கள் திருத்தம் கொடுத்திருந்தால், அதை நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். ஆனால், அவர்கள் அப்படித் தரவில்லை.

எடுத்ததற்கெல்லாம் 'பிரிவினை'—'பிரிவினை' என்று அலறுகிறார்கள். நான் மிகவும் வருத்தத்தோடும் உணர்ச்சியோடும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ளுகின்றேன்; அதாவது, தமிழரசுக் கழகத்தா

ராகிய நாங்கள் தேசபக்தி இல்லாதவர்களல்ல என்பதை எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

'தேசபக்தி' என்பது சிண்டிகேட் காங்கிரசின் சொந்தச் சொத்து அல்ல; 'தேசபக்தி' என்பது, நான் இங்கு வாயளவில் சொல்லிக் காட்டுவதன்று. 45 ஆண்டு காலமாக தேசபக்த னுக வாழ்ந்து காட்டி, அதன் பின்னர்தான் இந்தத் தீர் மானத்தை நான் இங்கு கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தியாவின் மீது எனக்குள்ள பக்தியின் காரணமாகத் தான் இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவையில் கொண்டு வந்திருக்கிறேன். 'காங்கிரஸ் தலைவர்கள்' என்று சொல்லிக் கொள்ளும் சில சுயநலக்காரர்கள் செய்யும் தவறினுல் இந்தி யாவின் எதிர்காலம் இருண்டு விடுமோ என்று பயந்துதான்—அதைத் தடுத்து நிறுத்தத்தான்—இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

எந்தத் தேசபக்தியோடு நான் விடுதலைப் போரின்போது சிறைச்சாலைக்குச் சென்றேனே, அதே தேசபக்தியோடுதான் இந்தத் தீர்மானத்தை இங்கு முன்மொழிந்திருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்திலுள்ள மாநில சுயாட்சிக் கருத்துக் கூட, எனக்குச் சொந்தமானதன்று. காங்கிரசிடமிருந்து, காந்தியடிகளிடமிருந்து, பண்டித ஜவகர்லால் நேருவிட மிருந்து கற்றுக்கொண்டதுதான்.

"விடுதலைப் போராட்டத்தின்போது நாங்கள் கூட, 'சுயாட்சி'—'சமஷ்டி' என்றெல்லாம் சொன்னேம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னுர். விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களுக்கு—மாநிலங்களுக்கு, "மாநிலங்களில் சுயாட்சியும் மத்தியில் சமஷ்டியும் அமையும்" என்று காங் கிரஸ் உறுதி மொழி கொடுத்து, விடுதலைக்குப் பின் மக்களை—மாநிலங்களை ஏமாற்றி விட்டது என்பதனை எதிர்க்கட்சித் தலைவரே ஒப்புக் கொள்ளுகிருர். இந்தப் போக்கு நியாயம் என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறுவார்களா?

விடுதலைப் போராட்ட காலத்தில் மட்டுமல்லாமல், விடுதலைக்குப் பின்னரும் கூட மாநில சுயாட்சி காங்கிரஸ் கட்சியால் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது.

சுதந்திரப் போராட்டம் நடத்தப்பட்ட காலத்தில் அரிபுராவிலும், திரிபுராவிலும் காங்கிரஸ் மகாசபை நடந்தது. அந்த இரண்டு காங்கிரசிலும் மாநில சுயாட்சிக்கு உறுதி கூறும் தீர்மானம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. அயல் நாட்டுறவு, போக்குவரத்து, பாதுகாப்பு நீங்கலாக, மற்றவையெல்லாம் மாநிலங்களுக்கு வழங்கப்படும்—பிரிந்து வாழும் உரிமையுடன்—என்று தீர்மானம் போடப்பட்டது. இது 1938லும் 1939லும் நிகழ்ந்ததாக நினைக்கிறேன்.

1942ல் காஷ்மீருக்குச் சென்ற மனித குல மாணிக்கம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், அங்குள்ள மக்களுக்கு உறுதிமொழி கூறும் வகையில், "நான் விரும்புவது பெடரேஷன் கூட அல்ல; கான்பெடரேஷன்" என்று சொன்னார். அதை நம்பித்தான்—விடுதலைக்குப்பின்—காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது. பிறகு நடந்ததென்ன?

சுதந்திரம் நெருங்கி வந்த நேரத்தில்-அரசியல் நிர்ணய மன்றத்தின் முதல்நாள் கூட்டத்தில் பேசுகையில் நேருஜி என்ன சொன்னார்? "நாம் அமைக்கப் போவது, பெடரேஷன்" என்று சொன்னார். ஆம்; கான்பெடரேஷனிலிருந்து கொஞ்சம் இறங்கி, 'பெடரேஷன்' என்று சொன்னார்.

அரசியல் நிர்ணய மன்றம் அமைவதற்கு முன்பு பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு இந்தியாவுக்கு வந்தது. அது, அயல்நாட்டுறவு-போக்குவரத்து-பாதுகாப்பு ஆகிய மூன்றையும் மத்திய அரசு வைத்துக் கொண்டு, மற்றவற்றை மிச்ச அதிகாரங்கள் உள்பட-மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. அதனை முணு முணுப்பின்றி ஏற்றுக் கொண்டுதான் காங்கிரஸ் கட்சி அரசியல் நிர்ணய மன்றத்திற்குள் சென்றது.

பின்னர், திடீரென்று ராஜ தந்திர விளையாட்டு நடந்தது. அதனால் பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது.

பாகிஸ்தான் பிரிந்து சென்ற பின்னர்—1947 ஆகஸ்டு 15ல் எஞ்சிய இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்தைக் கைவிட்டது காங்கிரஸ். நாடு துண்டாடப் பட்டதைக் காட்டிப் பயமுறுத்தி, இன்று நடைமுறையிலுள்ள யூனியன் அரசியல் அமைப்பை ஏற்படுத்தியது.

காங்கிரஸ் தலைவர்கள் முதலில் 'கான்பெடரேஷன்' என்றார்கள். பின்னர் அதைக் கைவிட்டு, 'பெடரேஷன்' என்றார்கள். பிறகு அதையும் கைவிட்டு, 'யூனியன்' அமைத்தார்கள், 1941ல் யு. என். ஓ-வில்.

> "காஷ்மீரம் இந்தியாவிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி அதன் ஒரு அங்கம் என்று சொல்கிறீர்கள். அப்படியானால் இந்தியாவிலுள்ள வேறு மாநிலங்களுக்கு இல்லாதபடி காஷ்மீருக்கு மட்டும் தனியாக அரசியல் நிர்ணய மன்றம் அமைத்துக் கொடுத்ததேன்? அதற்குத் தனிக் கொடி கொடுத்தது எதற்காக? மற்ற மாநில அமைச்சரவைத் தலைவர்கள் 'முதல்வர்' என்று அழைக்கப்படும் போது, காஷ்மீர் முதல்வர் மட்டும் 'பிரதமர்' என்று அழைக்கப்படுகிறாரே, ஏன்?"

என்று பாகிஸ்தான் பிரதிநிதி வினவியபோது, அப்போது ஐ. நா. மன்றத்தில் இந்தியாவின் பிரதிநிதியாக இருந்த சர். பி. என். ராவ் என்ன சொன்னார்? ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் அரிபுரா—திரிபுரா மகா சபைகளின் தீர்மானத்தைப் படித்துக் காட்டி,

> "காங்கிரஸ் கட்சியின் கொள்கை அனைத்து மாநிலங்களுக்குமே பிரிந்து வாழும் உரிமையுடன் சுயாட்சி யளிப்பதுதான், முதலில் காஷ்மீருக்கு

வழங்கப்பட்டிருக்கிறது. நாளடைவில் மற்ற மாநிலங்களுக்கும் வழங்கப்படும்,"

என்று பதில் கூறியிருக்கிறார்.

ஜவகர்லால் நேரு அவர்கள், தற்போதுள்ள திட்டக் கமிஷனைப் பற்றிக் குறிப்பிடும்போது, "அது ஒரு 'பேரலல் கவர்ன்மெண்ட்' (போட்டி அரசாங்கம்) ஆகிவிட்டது" என்று சொல்லியிருக்கிறார். அதன்படி நமது மாநிலம் இரண்டு மத்திய அரசின் ஆதிக்கத்தில் சிக்கியுள்ள நிலைமை இருக்கின்றது. மாநிலம் ஒவ்வொன்றின் மீதும் ஆதிக்கம் செலுத்துவது ஒரு மத்தியமல்ல; இரண்டு மத்தியம்!

எதிர்க்கட்சித் தலைவரவர்கள், 'மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுப்பது, பின்னால் அவை பிரிந்து போவதற்குத் தான் இடந்தரும்' என்று சொன்னார். யாரானாலும் சரி; என்ன சொல்லுகிறோம் என்பதைத் தெரிந்து சொல்ல வேண்டும்.

மைசூருக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே நதி நீர்த் தகராறு இருக்குமானால், அது மாநிலங்கள் சுயாட்சி பெறுவதனால் எப்படித் தீர்க்கப்படாமற் போகும்? மத்தியில் ஒரு ஆட்சி இல்லாதபடி—இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் நிலையில் மாநிலங்களுக்கு சுதந்திரம் கேட்டால்தான் இந்த பயத்தை எழுப்பலாம். மத்தியில் ஒரு ஆட்சி—சமஷ்டி அரசு இருக்கும் நிலையில் அது மத்திய ஆட்சியாக மட்டு மல்லாமல், மாநிலங்களிடையிலேற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் மத்தியஸ்த ஆட்சியாகவும் செயல்பட வாய்ப்பு இருக்கும் நிலையில் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவதால் எப்படிக் கேடு ஏற்படும்? எதிர்க்கட்சித் தலைவர் தாம் பேசுவதின் பொருள் உணர்ந்து பேச வேண்டும்.

இன்று என்னுடன் சேர்ந்து மாநில சுயாட்சி கேட்கும் தி. மு. கழகத்தினர் முன்பு நாட்டுப் பிரிவினை கேட்டார்கள் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர். காங்கிரஸ் கட்சி கூடத்

தான் முதலில் பிரிட்டிஷ் அரச விசுவாசிகளின் ஸ்தாபனமாக இருந்தது. அப்போது, பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட டொமினியன் ஸ்டேட்ஸ் (குடியேற்ற நாட்டு அந்தஸ்து) தான் கேட்டது. கால வளர்ச்சியிலே பரிபூரண சுதந்தரக் கோரிக்கைக்கு காங்கிரஸ் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள், "நாங்கள் பிரிவினை கேட்பதைக் கைவிட்டாலும், அப்படிக் கேட்டதற்கான காரணங்கள் போகவில்லை" என்று சொல்லுகிறார்கள். அதிலே தவறு (பிரிவினைக்கான உள் நோக்கம்) இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு மாநிலங்களை நடத்தும் போக்கில் அதிருப்தி கொண்டு—மாநில சுயாட்சி கேட்டால் கிடைக்காது என்ற அவநம்பிக்கை காரணமாக, முன்பு அவர்கள் பிரிவினை கேட்டார்கள்.

இன்று மாநிலந்தோறும் மக்கள் மனோநிலை மாறி வருகிறது. சில மாநிலங்களில் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு உடன்பாடுடைய கம்யூனிஸ்டுக் கட்சி சில மாநிலங்களிலே ஆட்சிக்கு வருகிற நிலை ஏற்பட்ட பின்னர், நாட்டின் அரசியல் சூழ்நிலை மாறிவிட்டது. அத்துடன், இந்தியாவைச் சுற்றிலும் பகை உணர்வு இருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அதனால், இன்றைய மாறுபட்ட சூழ்நிலையில் பிரிவினை தேவையில்லை என்பதனை உணர்ந்து, மாநில சுயாட்சி கேட்கிறது தி. மு. க.

எதிர்க் கட்சியினருக்கு உண்மையான தேசபக்தி இருக்குமானால், இந்த மனமாற்றத்தை இரு கைகளையும் கொடுத்து வரவேற்று இருக்கவேண்டும். மாநில சுயாட்சிக் கோரிக்கை அடிப்படையில் சமரசப் பேச்சைத் தொடங்கியிருக்க வேண்டும்.

திரு. கருத்திருமன்: 'தேசபக்தி இருக்குமானால்...' என்று சொன்னால் நான் தேசபக்தி இல்லாதவனா?

பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசும்போது அப்படிச் சொல்லவில்லையா?

ம. பொ. சி.! அப்படி நான் கருதியிருந்தால், 'தேசபக்தி இல்லாதவர்' என்று முற்றுப்புள்ளி வைத்தே சொல்லி யிருப்பேன். ஆனால், நான் கமா போட்டு, அவர் (எதிர்க் கட்சித் தலைவர்) எழுந்து, தனக்குத் தேசபக்தி இருப்பதாகச் சொல்லட்டும்; விவாதத்திற்குக் கொஞ்சம் சுவை யூட்டட்டும் என்றுதான் நிறுத்தி வைத்தேன். அவருக்கு தேசபக்தி இருக் கிறது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நினைப் பூட்ட விரும்புகிறேன்; தஞ்சை பிரகதீசுவரர் கோயில் தமிழ் நாட்டைச் சேர்ந்தது—தமிழ் மன்னரால் கட்டப்பட் டது. அந்தக் கோயிலிலே—அதைக் கட்டிய மன்னனின் சிலையை வைக்க இந்த மாநில ஆட்சி ஒரு சிறப்பான இடத் தைத் தேர்ந்தெடுத்துச் சொன்னால், அதை மத்திய அரசு ஏற்கவில்லை. கோயிலைக் கட்டியவனுடைய—அதற்கு மானியம் விட்டவனுடைய உருவச் சிலையை, காவல்காரனைப் போல, கோயிலின் நுழைவாயிலிலே வைக்கவேண்டும்; உள்ளே வைக்கக்கூடாது" என்று மத்திய அரசு கூறுகிறது.

நம் நாட்டின் அரசியல் சட்டத்தை வரைந்த அறிஞர் கள் எப்படியெல்லாம் அதனை வரைந்தனர் என்பது பற்றிக் கூறியுள்ளனர். அதனை அரசியல் நிர்ணய மன்ற நட வடிக்கைப் புத்தகத்தில் காணலாம். அமெரிக்க அரசியல் சட்டம், பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயம், ஸ்விட்சர்லந்து அரசியல் சட்டம் ஆகியவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அவற்றிலுள்ள நல்லவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

அவர்கள் எடுத்துக் கொள்ளத் தவறிய நல்லவை இன்னு முண்டு; அவற்றையும் நம்முடைய அரசியல் அமைப்புச் சட் டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லுவேன்.

அமெரிக்கா, ஒரு 'கான்பெடரேஷன்'—'பெடரேஷன்' என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்!

யு. எஸ். ஏ. (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா) என்ற அதன் பெயரே, அது ஒரு பெடரேஷன் என்பதனைக் காட்டுகிறது. ருஷ்யா, (யு. எஸ். எஸ். ஆர்.) (யூனியன் ஆப் சோவியத் சோசலிசக் குடியரசுகள்) என்ற தனது பெயராலேயே தான் ஒரு பெடரேஷன் என்பதனைக் காட்டுகிறது.

'இந்தியா' ஒரு சமஷ்டி நாடு என்பதை அதன் அரசியலைத் தயாரித்தவர்கள் காட்டத் தவறி விட்டார்கள்.

எனது தீர்மானத்தில் 'தமிழக சுயாட்சி' என்றல்லாமல், 'மாநில சுயாட்சி' என்றுதான் சொல்லியிருக்கிறேன். தமிழரசுக் கழகமும் தி. மு. கவும் மாநிலக் கட்சிகளாக இருக்கலாம். ஆனால், இந்தக் கழகங்கள் இந்திய தேசிய ஒருமைப்பாட்டை ஐயத்திற்கிடமின்றி ஏற்றுக்கொண்டுள்ளன. அதனால், அகில இந்திய நோக்குடன் இந்தப் பிரச்னையை அணுகி, அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி கோருகின்றன. மாநில நோக்குடன் தமிழகத்திற்குமட்டும் சுயாட்சி கோரவில்லை. ஆனால், அப்படித்தான் கோருகிறோம் என்ற ஒரு தவறான எண்ணத்தைக் கற்பிக்க நினைக்கிறார்கள்.

அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி என்பது அகில இந்தியக் கொள்கை. இந்த அடிப்படையில் 'தமிழக சுயாட்சி' என்பது கோரிக்கை. ஆக, அகில இந்திய ரீதியிலான கொள்கைக்கும் மாநில அளவிலான கோரிக்கைக்குமுள்ள உடன்பாட்டை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், 18 ராஜ்யங்களோடு அமெரிக்க சமஷ்டி ஆரம்பமானது. மாநிலங்களுக்கு பரிபூரண சுயாட்சியும்—பிரிந்து வாழும் உரிமையும் (ஆரம்பத்தில்) கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனிக் கொடியும் தனியாக ராஜ்ய கீதமும் வைத்துக்கொள்ள உரிமை வழங்கப்பட்டன. அதனால், ஆரம்பத்தில் சமஷ்டியில்

சேர மறுத்த—மாநில உரிமை பறிக்கப் படுமோ என்று சந்தேகங் கொண்ட ராஜ்யங்கள்கூட, பின்னர் வலுவில் வந்து சமஷ்டியிலே இணைந்து கொண்டன. அதனால், 51 ராஜ்யங்களைக் கொண்ட பெரிய பெடரேஷனாக இன்று விரிவடைந்திருக்கிறது அமெரிக்கா.

ருஷ்யாவில் ஜார் ஆட்சி காலத்தில் மாநிலங்களுக்கு சுயாட்சியில்லை. ருஷ்ய மொழி அந்த மொழி வழங்காத மாநிலங்களின் மக்கள் மீது திணிக்கப்பட்டது. ஏறக்குறைய இந்தியா இன்றிருக்கக்கூடிய நிலையில் ஜார் ஆட்சி காலத்தில் ருஷ்யா இருந்தது.

பின்னர், இந்த நிலை மாறியது. சோவியத் சோசலிச ஆட்சியிலே, மாநிலங்களுக்கு பிரிந்து வாழக்கூடிய உரிமையோடு சுயாட்சியும் தனிக் கொடியும் வழங்கப்பட்டன. மாநில மொழிகளின் காப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. அதன் விளைவாக, ஜார் ஆட்சி காலத்தில் இருந்ததைவிட, இன்றைய சோவியத் ருஷ்யா நிலப் பரப்பில் விரிவடைந்திருக்கிறது. அண்டையிலுள்ள ஹாலந்து, ருமேனியா ஆகிய நாடுகளோடு ஜார் ஆட்சிக் காலத்தில் சேர்க்கப்பட்டுப் போன பகுதிகளும் திரும்பவும் சோவியத் ருஷ்யாவோடு இணைக்கப்பட்டு, மாபெரும் ருஷ்யா உருவாகி யிருப்பதைப் பார்க்கிறோம்.

மாநிலங்களுக்குச் சுயாட்சி கொடுத்ததன் விளைவாக எந்த சமஷ்டி நாட்டிலாவது பிரிவினை ஏற்பட்டதுண்டா? உண்டென்றால், எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் காட்டட்டுமே!

பாகிஸ்தானை எடுத்துக் கொள்வோம். அங்கு மொழிவழி மாநிலங்கள் ரத்து செய்யப்பட்டன. மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என இரண்டு மாநிலங்களையே வைத்து அந்த மாநிலங்களுக்கும் சுயாட்சி கொடுக்க மறுத்தார் ராணுவ ஜனாதிபதியான அயூப்கான். அவருக்குப் பின் வந்த அதிபர் யாகியாகான் அயூப்கானின் கொள்கையையே

பின்பற்ற முயன்று முடியாமற் போகவே, இன்றையதினம் சுயாட்சியுடைய மொழிவழி ராஜ்யங்களை அமைத்துக் கொள்ள அனுமதித்துள்ளார். இதைப் பார்க்கும்போது, இராணுவ ஆட்சியாலேயே சாதிக்க முடியாத ஒன்றை ஜன நாயக ஆட்சியிலே நீங்கள் (எதிர்ப்பாளர்கள்) சாதிக்க முடியும் என்று நினைப்பதுதான் எனக்கு அச்சத்தைத் தருகின்றது. இது, நாட்டை எங்கு கொண்டு போகுமோ என்று அஞ்சுகின்றேன்.

இங்கு பேசியவர்கள், "மாநிலங்களுக்குச் சுயாட்சி வேண்டுமென்று கேட்டால், கிராம சுயாட்சி கேட்பார்களே" என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன், நான் காந்தியத்தை ஓரளவு புரிந்து கொண்டவன். ஆகவே, நான் கிராம சுயாட்சியை மறுப்பவனல்லன். ஆனால், அதை மாநில சுயாட்சிக்கு எதிர்வாதமாக வைக்க வேண்டாம். கிராம சுயாட்சியின் தொடக்கமாகத்தான் பஞ்சாயத்து யூனியன்கள் நிறுவப்பட்டுள்ளன. கிராம சுயாட்சி வளர்ந்துகொண்டுதான் வருகின்றது. ஆனால், நாடு சுதந்தரம் பெற்றபின்னுள்ள 23 ஆண்டு காலத்திலே—அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர்—மாநிலங்களுக்கு மத்தியிலுள்ள அதிகாரங்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளனவா? மத்தியிலுள்ள அதிகாரங்களில் ஒன்றாவது மாநிலத்திற்கு மாற்றப்பட்டதுண்டா? மாறாக, மாநிலத்திலுள்ள அதிகாரங்களில் சில மத்திய அரசுக்குச் சென்றிருப்பதைக் கண்டிருக்கிறோம்.

நான் சொல்ல விரும்புவது, ஒரு அரசியல் நிர்ணய மன்றம் அமைத்து இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்பதுதான். இப்போதுள்ள பிரச்னை அரசியல் அமைப்புச் சட்டத்தை மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கக்கூடிய வகையில் எப்படித் திருத்துவது என்பதுதான். இங்குள்ள நாம் அரசியல் அமைப்புச் சட்டப்படி நடப்பதாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளோம். நான் தெய்வத்தின் பேரில் பிரமாணம் செய்துள்ளேன். ஒரு வேளை எதிர் வரிசையில் இருப்பவர்களின் (தி. மு. க. வினரின்) தெய்வ நம்பிக்கையை எதிர்க்

கட்சித் தலைவரவர்கள் சந்தேகித்தாலும் என்னைப் பொறுத்த வரையில் அவ்விதம் சந்தேகிக்க மாட்டார் என்று நம்பு கின்றேன்.

அரசியல் சட்டத்தின் 368ஆவது விதிப்படியே அந்த அரசியல் சட்டத்தை நாம் திருத்தியமைக்க முடியும். சில திருத்தங்களுக்கு நாடாளு மன்ற உறுப்பினர்களில் மூன்றி லிரண்டு பங்கினர் ஆதரவு வேண்டும். அதன்படித்தான் நேற்றுகூட நாடாளு மன்றம் அரசியல் சட்டத்தில் ஒரு திருத் தம் செய்திருக்கிறது. அதுபோல், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசு ஒரு மசோதா கொண்டு வருமானல், இன்றுள்ள அரசியல் சட்டத்திற்கு உட் பட்டே நாம் கோருகிற மாநில சுயாட்சியை அடைய முடியும்.

நக்சல்பாரிகளை ஒடுக்க இந்திரா அரசு எதுவுஞ் செய்ய வில்லையே என்று சிண்டிகேட் காங்கிரசார் சொல்கிறார்கள். இன்றுள்ள அரசியல் சட்டத்தின்மீது ஏற்பட்டுள்ள அவ நம்பிக்கையின் அகோர வடிவம்தான் நக்சலைட்ஸ். இன்று படித்த இளைஞர்கள்—பட்டதாரிகள் நக்சலைட்ஸ்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை பெருகும்படி விடாதீர்கள்!

உறுப்பினர் திரு. கோதண்ட ராமையா (சுதந்திரா) அவர் கள், இந்தத் தீர்மானத்தை இப்போது நிறைவேற்ற வேண்டாம். வேண்டுமானல், 1972க்குப் பின் பார்த்துக் கொள்ளலாம்—என்றார். எந்த நம்பிக்கையில் அவர் அவ்விதம் கூறினர் என்பது எனக்குப் புரியவில்லை. நான் உறுதியாகச் சொல்கிறேன், 1972க்குள் மாநில சுயாட்சிக்கு உத்தரவாதம் தரப்படவில்லையானல், 72க்குப் பிறகு இந்தியா அமைதியாக இருக்கும் என்று யாரும் உத்தரவாதம் கொடுக்க முடியாது.

முன்பொரு சமயம் 'அஸாம் அஸாமியருக்கே' என்ற குரல் எழுந்தது. 'அதுபற்றி உங்கள் கருத்தென்ன?'—என்று காந்தியடிகளிடம் கேட்டபோது, அவர் கூறினர்.

'அசாம் அசாமியருக்குத்தான். அதை மறுக்க முடியாது. ஆனால், அதற்கொரு நிபந்தனையுண்டு' என்றார். அதாவது, "இந்திய நாட்டின் ஐக்கியத்தை அசாமியர் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

"இந்தியாவுக்கு எத்தகைய சுதந்தரத்தை நான் விரும்புகிறேனோ, அதே சுதந்தரத்தை அசாமியர்களுக்கு மட்டுமல்ல; எல்லா மாநிலங்களுக்கும் வழங்க வேண்டும்."

"அதிகாரம் கோயில் கோபுரம் போல அடிப்புறம் அகன்றும் நுனிப்புறம் குறுகியும் அமைய வேண்டும்" என்று அடிகள் கூறியுள்ளார்.

திரும்பவும் சொல்லுகின்றேன்; அரிபுரா, திரிபுரா காங்கிரஸ் மகாசபைகளின் தீர்மானத்திலும், அரசியல் நிர்ணய சபையின் முதல் நாள் கூட்டத்தில் பண்டித நேரு நிகழ்த்திய சொற்பொழிவிலும், காங்கிரஸ் மகாசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவின் திட்டத்திலும் டிசென்ட்ரலைஸேஷன் (அதிகாரப் பரவல்) என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கே. அனுமந்தையா அவர்கள் தலைமையில் இயங்கிய நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் சிபாரிசிலும் மத்தியில் அதிகாரங்கள் குவிந்துகொண்டே போகிறதென்றும், அது நாட்டுக்கு நன்மை தராதென்றும் கூறப்பட்டுள்ளது என்பதனை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நினைப்பூட்டுகின்றேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி எனது பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

மொழிவழியே தமிழ் மாநிலம் வேண்டுமென்று நான் கோரியபோது, அது "காட்டுமிராண்டிகள் கொள்கை" என்றார் ஒரு பெரியவர். அதை அப்போது நான் சகித்துக் கொண்டேன்.

வடக்கெல்லைப் பகுதிகளை—தெற்கெல்லைப் பகுதிகளை தமிழகத்துடன் சேர்க்கக் கோரியபோதும், அது 'சின்னப் புத்தி' என்ருர்கள். அதையும் சகித்துக் கொண்டேன்,

இன்று நாம் காண்பதென்ன? மொழி வழி தமிழ் மாநிலம் அமைந்து விட்டது. வடக்கெல்லைப் பகுதிகளும் தெற்கெல்லைப் பகுதிகளும் ஓரளவு கிடைத்திருக்கின்றன.

'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க நான் கோரியபோது, 'அது சோறு போடுமா?' என்று கேலி பேசினுர்கள். அதோடு நில்லாமல், தமிழரசுக் கழகத் தோழர்களில் 1700 பேர்களை—நடிகர் உள்பட—சிறையில் அடைத்தார்கள். ஆனுல், 'தமிழ் நாடு' பெயர் தீர்மானம் இந்தப் பேரவையில் வந்தபோது, எதிர்க் கட்சியாகிவிட்ட காங்கிரசும் ஆதரித்து வோட்டு போட்டதைக் கண்டோம். காங்கிரஸ்காரர்கள் 'தமிழ் நாடு வாழ்க' என்று கோஷித்ததையும் கேட்டோம்.

அன்று நாங்கள் (தமிழரசுக் கழகத்தார்) முதலில் சொன்னபோது அதனை எதிர்த்தவர்கள், பின்னர் ஆதரித் தார்கள். அதுபோல, இதையும் (மாநில சுயாட்சியையும்) காங்கிரஸ்காரர்கள் ஆதரிக்கும் காலம் வரும் என்று நம்பி, முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எனது தீர்மானத்தை வற்புறுத்தாமல் விடுகிறேன்.

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர் :: சென்னை-4.